உ

கணபதி துணை.

ஆருக்கும் அஞ்சாத அசாசூரன் கதை.

இஃது

மா-ா-ஸ்ரீ, கும்பகோணம் புஸ்தகவியாபாரம்

கோ. ஸ்ரீனிவாச கோனார் கேட்டுக்கொண்டபடி

ம-ா-ா-ஸ்ரீ, உபாத்தியாயர் காலஞ்சென்ற

சித்திரகவி

சின்னப்ப செட்டியாரவர்கள்

மாணாக்கரிலொருவனாகிய

பாலகவி

கோ. ச. விநாயகமூர்த்தி செட்டியாரவர்களால்

இயற்றப்பட்டு

கு ஆ நாதமுனி முதலியாரால்

சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

இதன் விலை] 1907 [அணா 10

TOTAL Pages - 56

ACCN:NO. 223124

ரிஜிஸ்டர் காபிரைட்டின்

அறிவிப்பு.

இதனால் சகலமான கனதனவான்களுக்குந்தெரிவிப்பதுயாதெனில் இவ்வயருக்கும் அஞ்சாத அசாசூரன் கதையை ம-ா-ா-ஸ்ரீ பாலகவி கோ. ச. விநாயகமூர்த்தி செட்டியாரால் இயற்றப்பட்டு யானாகிய கு. ஆ. நாதமுனி முதலியாரால் பொருளுதவி புரிந்து சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு கனம்பொருந்திய கவர்ன்மெண்டாரவர்கள் 1867 வருஷத்திய செக்ஷன் 28வது ஆக்டு 1907 வது வருஷத்திய ரூல்ஸ் பிரகாரம் ரிஜிஸ்டர் காபிரைட் செய்திருக்கிறபடியால் என்னுடைய உத்திரவின்றி இந்நூலை எவர்களும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு,

கு. ஆ. நாதமுனி முதலியார்.

ம-ா-ா-ஸ்ரீ சித்திரக்கவி
சின்னப்ப செட்டியாராலியற்றிய

சாற்றுக்கவி

ஆசிரிய விருத்தம்.

சென்னை சேப்பாக்கமதில் சீர்வைசிய குலத்ததினில்
கோத்முதுமா மகாரிஷி கோத்திரத்தில் உற்பவித்த
அன்பன் சமரபுரி அரும்புதல்வன் விநாயகனை
எல்லோரும் வாழ்த்த மியபபினேன் புவியோரே.

ம-ா-ா-ஸ்ரீ சுந்தா ஜெய வீர சூர தீர கவிராஜ
கந்தசாமி பிள்ளை யவர்களாலியற்றிய

சாற்றுக்கவி

பன்னீர்க்கழிலெடி லாசிரிய விருத்தம்.

சிரிலகு மாவீர ஜெயவிஜய சூரனாய்
  சித்தந் திகைத்திடாமல்
சிற்றறிவினுலந்த தரணியோர்க் கஞ்சாத
  சிங்கமென வந்துதித்த
பேரிலகசாசூர னனவன் சரிதையினை
  பெட்புறும் செந்தமிழினில்
பேசுபுக ழமிர்தகட் சொற்சுவை பொருட்சுவை
  பெருமையுடனே யமைத்து
பாரிலகு சேப்பாக்கந் தன்னிலன்பாய்நாளும்
  பலகலை யுணர்ந்தநண்பன்
பண்புறும் விநாயக மூர்த்தியினி தாகவே
  பக்ஷமுடனே யியற்ற
தாரிலகு நாதமுனி முதலியா ரன்புடன்
  தரணியோர்க் கினிமையாக
தற்போதி லச்சிட்டான் பெரியோர்க ளனுதினம்
  தகுமிது வென்றேற்றவே.

முகவுரை.

இதை வாசியங்கள். இன்பத்தைப் புசியுங்கள்.

கண்பர்காள்!

எழுகடல் சூழ்ந்த இச் சென்னைமாநகரில் வசிக்கும் எனதன்பார்ந்த நேயர்களே இச்சிறு புத்தகமாகிய ஆருக்கும் அஞ்சாத அசாசூரனானவன் தான் மூன்று பெண்சாதிகளோடு வாழ்ந்திருத்தலும் பிறகு தன் ஊரைவிட்டு புறப்படுதலும் அரசபுத்திரியைவிவாகம் முடித்தலும் அன்னவள் கதை சொல்லும்படி கேட்க தன் பூர்வீக வரலாற்றைப் புகட்டலும இன்னும் அன்னவனுடைய பராக்கிரமம் யாதெனில் திருடர்களை மிரட்டி அரசனிடத்தில் கொண்டு போவதும் பூதத்தைக் கொல்வதும் அரச புத்திரனை அவமானப் படுத்துவதும யானையை கிழித்தெறிவதும் அரக்கனை சம்மாறஞ் செய்வதும் இன்னும் அனேக விருத்தாந்தங்களடங்கிய இச்சிறு புத்தகத்தை வாசிக்கும் எனதன்பர்கள் சொற்பிழை யிருந்தபோதிலும் பிழைதிருத்தி வாசித்து இச்சிறுவனை பெருமைபடச் செய்வீரென்று தங்களுடைய மேலான கனத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு,

பாலகவி கோ. ச. விநாயகமூர்த்தி செட்டி.

உ

கடவுள் துணை.

ஆருக்கும் அஞ்சாத

அசாசூரன் கதை.

கதையின் வரலாறு.

அசோகா பட்டணம் என்கிற ஓர் ஊரின்கண் ஓர் குடியானவன் இருந்தான். அவன் பெயர் அசாசூரன். அவனே அதிக பராக்கிரமமுடையவன் அவன் மூன்று பெண்சாதிகளுடன் சுகமாக வாழ்ந்திருந்து ஓர்நாள் அம்மூவரையுமழைத்து அடி யென் கருத்துக்கிசைந்த கண்மணிகாள் நீங்கள் மூவரும் நம்மில்லத்தைவிட்டு வேறெங்கும் ஓடாமலும் ஒருவருடைய வார்த்தையை ஒருவர் தட்டாமலும் சுகமாக வாழ்ந்திருங்கள் யான் சென்று சில திரவியம் சம்பாதித்து வருகிறேனென்று தெரிவித்ததைக் கேட்ட அம்மூவரும் மனக்கிலேசமுடையவராய் நாதா தாங்கள் சென்று எப்பொழுது வருவீரென்றுகேட்க அப்பொழுது அசாசூரன் கண்மணிகாள் யான் சென்று அதி துரிதத்தில் வந்துவிடுகிறேனென்று தெரிவித்து அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு அயோமுகியென்னும் பட்டனம் போய் சேர்ந்தான்.

இதுநிற்க அந்நகரினைப் பரிபாலிக்கும் வேந்தனது புத்திரிக்கு அநேக நாளாய் விவாகமாகாமலிருக்க அம்மன்னன் மனக்குறையுற்று தன் பெண்சாதியையழைத்து அடி யென் காதலி நமது புத்திரியாகிய மோகனவல்லிக்கு இன்னும் விவாகமாகாம லிருக்கின்றதே என்ன செய்வதென்று கேட்க அதற்கு மன்னன்தேவி மணாளனை நோக்கியென் கருத்துக்கிசைந்த காதலா யாம் என் செய்வது. யாவற்றும் பரம்பொருளின் அருளில்லாது நடவாதென வுரைத்து அந்தப்புறமேகினள். அவ்வார்த்தையைக் கேட்ட மன்னன் மனக்கிலேசமுற்று சாக்ஷாத் பரமசிவத்தை நோக்கி ஏ பரமசிவமே உன்னுடைய அருளாலுதித்த புத்திரிக்கு இன்னும் விவாகமாகாதிருக்கின்றது. என் செய்வேனென்று பிரார்த்தித்து பள்ளியறையிற் சென்று துயில்கின்றனன். துயிலுகையில் மன்னனுடைய கனவில் பரமசிவன் தோன்றி மன்னா நீ யசதொன்றுக்கும சஞ்சலப்பட வேண்டாமென்று தெரிவித்து மறைந்தருளினர். உடனே அதிகாயன் விழித்

தெழுந்து தன் பத்தினியாகிய அபிராமிசுந்தரியை எழுப்பி அடி காதலி யான் துயிலும்போது பரமசிவம் என் கினவில் வந்து ஏ மன்னா நீ யாதொன்றுக்கும சஞ்சலப்படவேண்டாமென்று மறைந்தருளினர் என்றான்.

மறுநாட் காலையில் அதிகாய மகாராஜனும் அன்னவர் பாரியாளாகிய அபிராமிசுந்தரியும் அலங்கிர்தம் செய்துக்கொண்டு புறப்பட்டு தன் பெண்ணிருக்கும் மாளிகையிற்சென்று தன் தவப்புதல்வியாகிய மோகனவல்லியையழைத்து என்னருமைக் குழந்தாய் உனக்கு விவாகமாகாததால் யாங்கள் மனோவியாகூலமாயிருந்தோம். இப்பொழுது பரமசிவத்தினருளால் யாதும் குறைவில்லையென்று தெரிவித்தார். அவ்வார்த்தையைக் கேட்ட மோகனவல்லி எழுந்து தன் தாயையும் தந்தையையும் பார்த்து தெரிவிக்கின்றாள். ஐயா என் அன்புள்ள பிதாவே அம்மா யென்னைப்பெற்ற மாதாவே யான் சொல்வதை சற்று செவிகொடுத்துக் கேட்டருளுமென்று சொல்லத் தொடங்கினாள் அதாவது யாதெனில் இப்பொழுது யானிரண்டு வினா சொல்லப்போகின்றேன். அதற்கு யாரொருவர் விடை கொடுக்கின்றாரோ அன்னவரையே மாலை சூட்டுவேன். இல்லாவிடில் யான் மணஞ்செய்துகொள்ள மாட்டேனென்று தெரிவித்தாள் அவ்வார்த்தையைக் கேட்ட அதிகாயன் மனமகிழ்ந்து சந்தோஷசாகரத்தில் மூழ்கி சகல தேசத்தரசர்களுக்கும் மணவோலை யெழுதி அனுப்பினான். மணவோலைபோய் சேர்ந்ததும் அரசர்களெல்லாம் தங்கள்தங்கள் சைன்னியத்துடன் புறப்பட்டுவந்தார்கள். இது நிற்க

அசாசூரன் அயோமுகியென்னும் பட்டணத்தில் வந்து ஓர் ஔவையார் வீட்டில் போஜனம் செய்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்கையில் ஓர்நாள் அவ்வௌவையாரை நோக்கி ஏ அம்மா இவ்வூரில் யாதேனும் விசேஷமுளதோவென அதற்கு ஔவையார் அப்பா இவ்வூரில் என்ன விசேஷமிருக்கின்றது ஒன்றுமில்லை. இந்நகரினைப் பரிபாலிக்கும் அதிகாய மகாராஜன் புத்திரிக்கு அநேக நாளாய் மணமில்லாதிருந்தது நேற்றைய தினமென்னமோ சகல தேசத்தரசர்களும் வந்திருக்கின்றார்கள். நாளைய தினமென்னமோ அரசன் மகள் ஏதோ இரண்டு கேள்வி கேட்கப்போகின்றாளாம். அக்கேள்விக்கு யாதாமொருவர் விடையளிக்கின்றாரோ அவளவரையே மாலையிடுவாளாம் இதே விசேஷம் தவிர வேறொன்றுமில்லையெனக்கேட்ட அசாசூரன் கடைவீதிக்குச் சென்று தனக்கு வேண்டிய உடுப்புகள் யாவற்றும் வாங்கிக்கொண்டு பொழுது எப்போ விடியுமென்று விழித்திருந்து பொழுது விடிந்ததும் புறப்பட்டு அரசன் மாளிகையி லோர் புறம்போய் நின்றுகொண்டிருந்தான்.

பிறகு சகல தேசத்தரசர்களும் வந்து தங்கள் தங்களுக்கிட்ட ஆசனத்தில் வீற்றிருந்தார்கள். இப்படியிருக்க அரசனுக்கினப்படி தோழிகள் மோகனவல்லியை சகல ஆடையாபரணங்களுடன் சிங்கரித்து சபையி லழைத்துவந்து

சகல தேசத்தவர்களையுங்காட்டினாள். உடனே மோகனவல்லி சகல தேசத்தர சர்களையும் பார்த்து கரங்குவித்துக் கூறுவாள். ஐயா அரசர்களே, இப்பொழுது யான் கூறப்பட்ட வினாவுக்கு யாரொருவர் விடையளிக்கின்றீரோ அன்னவரே எனக்கு மணாளனாகவும் மற்றவர்களெல்லாம் எனக்கு தந்தை தமையர்களைப் போலவும் எண்ணிக் கூறுகின்றேனென்று கேட்க அதற்கு சகல தேசத்தரசர் சர்களும் நல்லதெனக் கூற உடனே பெண் கூறுகிறாள். ஐயாமகாராஜாக்களே கூறுகிறேன் கேளுமென்று சொல்லத்தொடங்கினாள்.

ஐயா அரசர்களே என்னிடத்திலொரு சின்ன பையன் இருக்கிறான் அவனுக்கு எல்லா அவயவங்களுமுண்டு. அவனை எல்லோரும் பார்க்கின்றார்கள் யான் பார்க்க முடியவில்லை. அதற்கும் கருவாடு உழக்கு பால் கறக்குமென்பதற்கும் இந்த இரண்டிற்கும் விடை யளிக்கவேண்டுமெனக் கூற அவ்விடத்திலுள்ள அரசர்களெல்லாம் அந்த வினாவுக்கு என்ன விடையென்று யோசித்திருக்கையில் அங்கு வந்திருந்த அசாசூரன் அந்த வினாவுக்கு பதிலுறைத்தான். உடனே மோகனவல்லி சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து ஐயா தேவரீரே என் பர்த்தாயானே நின் பத்தினியென்று தெரிவித்து தன் கரத்திலிருந்த மாலையை அசாசூரனுக்கு அளித்தாள். அளித்ததும் அங்கு வந்திருந்த அரசர்களெல்லாம் அந்தப்பெண்மணியினுடைய முகம் பார்க்க வெட்கி தங்கள் தங்கள் இருப்பிடத்திற் கேகினார்கள்.

பிறகு அசாசூரனை அரண்மனைக்குள் அழைத்துச்சென்று ஸ்நானபான நேமநிஷ்டை யாவும் முடிப்பிக்கச்செய்து பொன்மயமான பட்டாடைகளுடுத்தி அலங்காரஞ்செய்து திருமணப்பந்தலில் மாப்பிள்ளையையும் பெண்ணையும் உட்காறவைத்து சடங்கு முதலிய யாவையும் செய்து திருமங்கல்யதாரணம் செய்தான்பிறகு பெண்ணையும் பிள்ளையையும் எழுப்பி விடுதியறையில்விடுத்து போஜனம் முதலிய யாவும் உண்பிக்கச்செய்து தாம்பூலங் கொடுத்தார்கள் அதை அசாசூரனும் மோகனவல்லியும் தரித்து சரச சல்லாபமாயிருந்தார்கள். மூன்றுநாளிரவு ஓர் அறையை சிங்காரித்து அதில் இருவரையும் சயனிக்க அனுப்புகையில் இருவரும் சென்று மஞ்சத்தில் சயனித்துக்கொள்ளும்போது அசாசூரனைப் பார்த்து என் பிராண நாதா எனக்கோர் கதை சொல்லவேண்டுமெனக் கேட்ட நாயகியைப் பார்த்து அசாசூரன் சொல்லத் தொடங்கினான்.

அசாசூரனுக்கும் மோகனவல்லிக்கும் வினாவிடை.

அசாசூரன்:—பெண்ணே ஓர் ஊரில் சூரனென்பவன் இருந்தான்.

மோகனவல்லி:—அவன் என்ன செய்தான் பிராணநாதா.

அசாசூரன்:—ஆஹா நானென்ன சொல்வேன் அவன் செய்த வேலையும் அவன் பராக்கிரமமும் அவன் வல்லமையும் ஆயிரம் நாவு படைத்த ஆதி

திருமணப் பத்திரிகை

ம-ா-ா-ஸ்ரீ, ... அவர்கட்கு

ஐயா,

நிகழும் 17607ஹு பற்பல ஜாதி மாதம் பரிகாசம் செய்கின்ற கிழமை காலே $10\frac{1}{2}$ மணிக்குமேல் $7\frac{1}{2}$ மணிக்குள்ளாக மனமில்லாத் திருடிஷத்திரத்தில்,

எனது	()	ம-ா-ா-ஸ்ரீ அயோமுகி அதிகாய மகாராஜன்
ஜேஷ்ட குமாரன் சிரஞ்சீவி	()	கனிஷ்ட குமாரத்தி சௌபாக்கியவதி
ஆருக்கும் அஞ்சாத அசாசூரனுக்கும்,	()	மோகனவல்லிக்கும்,

அயோமுகி பட்டணத்தில் 56வது நெம்பர் அரண்மனையில் நடக்கும் விவாக சுப முகூர்த்தத்திற்கும், இடையில் நடக்கும் ஔபாசனத்திற்கும் தாங்கள் தங்களிஷ்டஜன குடும்ப சமேதராய் விஜயஞ்செய்து ஷை தம்பதிகளை ஆசிர்வதிக்கும்படி பிரார்த்திக்கின்றனன்.

இங்ஙனம்,
தங்கள் விதேயன்,
அ. சோமசுந்தரம் பிள்ளை.

சேஷனாலும் சொல்ல முடியாது. நீ என்னை அன்புடன் ஓர் கதை சொல்லும்படி கேட்டதினால் நான் தெரிந்தவரையில் சொல்லுகிறேன் கேட்பயடி என்னாசை நாயகி.

மோகனவல்லி:—நாதா நீர் தாமதமாய் சொல்லும் நான் செவிகொடுத்து கேட்கின்றேன்.

அசாசூரன்:—கண்மணி இதோ சொல்கின்றேன் கேளென்று சொல்லத்தொடங்கினான். அந்த சூரன் ஓர்நாள் தன்னூரைவிட்டு புறப்பட்டு ஒரூரை நோக்கிப் போகும்போது வழியிலே நான்கு திருடர்களைக் கண்டான். கண்டதும் மனதில் பயமில்லாதவனாய் அந்நால்வரையும் நோக்கி அடே நீங்கள் நால்வரும் எங்கு செல்கின்றீர்களென்று கேட்டான். உடனே அக்கள்வரும் இவனைப்பார்த்து பயந்து ஐயா நாங்கள் எங்களுடைய தொழிலுக்குப் போகிறோம் என்று விநயமாய்த் தெரிவித்தார்கள். உடனே சூரனுக்கு அதிக கோபம் பிறந்து அடே மடையர்களா உங்களுக்கென்ன தொழில் தெரிவிப்பீர். இல்லாவிடில் உங்கள் நால்வரையும் என் கையில் இருக்கப்பட்ட கதாயுதத்தால் சிரத்தைப்பிளந்து எமபுரம் சேர்ப்பேனென்று தெரிவித்தான்.

உடனே அத்திருடர் நால்வரும் திடுக்கிட்டு ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து அதிக பயங்கரத்துடன் எங்கள் தொழில் களவுத்தொழில் என்று தெரிவித்தார்கள். சூரனுக்கு முன்பிலுமதிக கோபம்பிறந்து இந்நால்வரையும் பிடித்துக் கட்டிக்கொண்டுபோய் கனகாபுரியைப் பரிபாலனஞ்செய்யும் காமேந்திர மகாராஜனிடத்தில் அவர்களை விடுத்து இன்னவர்களுடைய சங்கதியை விசாரியுமென்று தெரிவித்தான். அக்காமேந்திரமகாராஜன் சூரனுடைய சாமர்த்தியத்திற்கு அதிசயித்து அப்பா வுன் சாமர்த்தியமே சாமர்த்தியமென்று புகழ்ந்து உனக்கென்ன தொழில் செய்யத்தெரியுமென்று கேட்க அதற்கு சூரன் தெரிவிக்கின்றான். ஐயா மகாராஜாவே எனக்கு ஜோசியம், தந்திரம், ஜாலம், மல்யுத்தம் இவைகளும் இன்னுமநேக தந்திரங்களும் தெரியுமென்றான். அதற்கு காமேந்திரமகாராஜன் அநேக சந்தோஷசாகரத்தில் மூழ்கினவனாய் அரண்மனை அப்பண்ணா ஜோசியரை யழைத்து ஐயா அப்பண்ண ஜோசியரே தாங்களும் இதோ நம் சபையில் வீற்றிருக்கும் சூரஜோசியரும் எனக்கொரு ஜோசியம் சொல்லவேண்டுமென்று கேட்க உடனே சூரஜோசியன் எழுந்து நமஸ்காரஞ் செய்து சொல்லுகிறான். தாங்கள் யாது காரியத்திற்காக ஜோசியம் சொல்லவேண்டுமென்று கேட்கிறீர். தயவுசெய்து மருமொழி கூறுமென்று கேட்க அதற்கு காமேந்திரமகாராஜன் புன்நகைபுரிந்து கூறுகின்றார். ஐயா சூரஜோசியரே தாங்களும் அப்பண்ண ஜோசியரே தாங்களும் கவனத்துடன் கேட்டு நான்

எப்பொழுது விடைகேட்கின்றேனோ அப்பொழுதளிக்கவேண்டுமென்று சொல்லத்தொடங்கினார். யாதெனில், நம் அரண்மனைக்கு பதினான்கு வாயலுண்டு கான் இன்றையதினம் எந்த வாயல்வழியே வெளியே போவேன் அதை யான் போய்வந்தபிறகு தெரிவிக்கவேண்டுமெனக் கூறி அவாளவாள் இருப்பிடமேக விடைகொடுத்து அந்தப்புறமேகினன்.

இதுநிற்க, அரண்மனை அப்பண்ண ஜோசியர் தனக்குத் தெரிந்த சாஸ்திர விதிப்ப்டி சக்கரங்கள் போட்டு மகாராஜா இன்றையதினம் பதினோரும் வாயல் வழியே சென்றார் என்று தெரிந்து தான் ஒரு காகிதத்தில் மகாராஜா தாங்கள் இன்றையதினம் பதினோரும் வாயல்வழியே வெளியே சென்றிருந்தீரென்று எழுதிவைத்துக்கொண்டிருந்தான். சூரஜோசியன் தனக்குத்தெரிந்த சாஸ்திர விதிப்படி சக்கரங்கள் போட்டு ஒரு காகிதத்தில் மகாராஜா இன்றையதினம் அன்னவர் தெரிவித்த பதினான்கு வாயல்வழியிலேயும் செல்லவில்லை வேறு புதுவழியாகச் சென்றிருக்கின்றாரென்று எழுதிவைத்துக்கொண்டான். நிற்க,

அந்தப்புறமேகின காமேர்திரமகாராஜன் இவ்விருவர்களுடைய சாமர்த்தியத்தைப்பார்க்க பிரியமுள்ளவராய் தமது வேலைக்காரரிலொருவனை அழைத்து நம்மிட அரண்மனைக்கு பதினான்கு வாயலுண்டே அந்த வாயல்களில்லாமல் புதிதாக ஒரு வாயல் உண்டாக்கவேண்டுமென தெரிவிக்க நல்லதென்று சம்மதித்து உடனே சென்று இன்னும் சில கூலியாட்களை அழைத்துச்சென்று சிறிதுநேரத்தில் ஒரு புதிய வாயலுண்டாக்கி பிறகு அரசனிடம் வந்து மகாராஜா தாங்கள் தெரிவித்தவாறே ஓர் அழகிய வாயலுண்டாக்கினேன் என்று தெரிவித்தான்.

அதற்கு காமேந்திர மகாராஜன் சந்தோஷசாகரத்தில் மூழ்கி தன்னுடைய வேலைக்காரர்களுக்கு திரண்ட வெகுமதி கொடுத்து செல்ல உத்தரவளித்து தானும் மந்திரியுமாக அந்தப்புற வழியாகவந்து நகரத்தைச்சுற்றி மறுபடியும் அதேவழியாக அரண்மனைக்குச்சென்று நித்திரைசெய்தனர். காலையிலெழுந்து நித்தியகடனைமுடித்து அரசுக்குச்சென்று தேச வளப்பங்களை மந்திரிகளால் கேட்டு மனமகிழ்ந்து சந்தோஷங்கொண்டு வீற்றிருக்கையில் அரண்மனை அப்பண்ண ஜோசியர் தான் எழுதிவைத்திருந்த காகிதத்தை சேவகனிடத்தில் கொடுத்து மகாராஜாவினிடத்தில் கொடுக்கும்படி ஆக்கியாபித்தான். அவ்வாறே சேவகன் அக்காகிதத்தை மகாராஜாவிடத்தில் கொண்டுபோய்நமது அரண்மனை அப்பண்ண ஜோசியர் இக்காகிதத்தைக்கொடுத்தாரென்று தெரிவித்து அரசனிடம் கொடுத்தான். பிறகு சூரஜோசியன் தான் எழுதிவைத்திருந்த காகிதத்தையும் மற்றொரு சேவகனிடத்தில் கொடுத்து மகாராஜாவிடத்தில் யான் கொடுத்ததாக தெரிவித்து கொடுப்பாயென்று ஆக்கியாபிக்க அவ்வாறே அச்சேவகன்

மகாராஜாவினிடஞ் சென்று நமஸ்காரஞ்செய்து மகாராஜாவே இந்த லிகிதந்தை சூரஜோசியர் தங்களிடம் கொடுக்கும்படி ஆக்கியாபித்தாரென்பதாய் தெரிவித்து தந்தனன். அரசன் மனமகிழ்ந்து இருவருடைய லிகிதத்தையும் வாசித்துப்பார்த்து புன்சிறிப்புற்று சூரஜோசியன் அநேக வல்லமையுடையவனென்றும் சாமர்த்தியனென்றும் மனதிற்குள்ளே தாமே நினைந்து தன் மந்திரியை அழைத்து மந்திரி நாம் நேற்றையதினம் எவ்வழியாக வெளியே சென்றோமென்று வினவ, அதற்கு மந்திரி மகாராஜாவே யாம் ஓர் புது வழியாக சென்றோமென்று தெரிவிக்க அதற்கு மகாராஜா யான் தெரிவிக்கின்றதை கேட்பீரென்று சொல்லுகிறார். மந்திரி நேற்றையதினம் நான்கு கள்வர்களைப் பிடித்துவந்த அதிபராக்கிரமமுடைய சூரன் மிகுந்த வல்லமைசாலியாக இருக்கின்றான். யாதெனில் அக்கள்வர்களைபிடித்துவந்தபொழுது உனக்கென்னென்ன தொழில் செய்யத்தெரியுமென்று கேட்டேன். அதற்கு அன்னவன் ஜோசியம், மல்யுத்தம் ஜாலம் மந்திரம் இன்னும் அநேகவித தந்திரமும் செய்வேனென்று தெரிவித்தான். ஆனதால் அவனுடைய சாமர்த்தியத்தைக் காணவேணுமெனக் கருதி அன்னவரையும் நம்மரண்மனை அப்பண்ண ஜோசியரையும் அழைத்து ஒரு ஜோசியம்சொல்லவேண்டுமெனனக் கேட்டேன். அதற்கவர் யாது காரியத்துக்காக ஜோசியம் சொல்லவேண்டுமெக் கேட்டார் அதற்கு நான் நம்மரண்மனைக்கு பதினன்கு வாயலுண்டு. எந்த வாயல்வழியே வெளியே செல்வேன் தெரியுமென்று இருவருக்குமுரைத்து நமது வேலைக்காரர்களை அழைத்து வேறு புதுவாயல் ஏற்படுத்தத் தெரிவித்தேன். அதேபிரகாரம் அன்னவர்கள் புதுவாயல் ஏற்படுத்தினார்கள். அவ்வாயல்வழியே நாம் வெளியே சென்றுவந்தோம் அதேபிரகாரம் சூரஜோசியன் தனக்குத்தெரிந்த வல்லமையினால் புது வழியே சென்றோமென்று இந்த லிகிதத்தி லெழுதித்தந்திருக்கின்றார், தவிர நம்மரண்மனை அப்பண்ண ஜோசியர் பதினேறும் வாயல்வழியே வெளியே போனதென்று பேசிக்கொண்டிருக்கையில் உடனே மந்திரி மகாராஜாவைப் பார்த்து அரசே சூரனென்னப்பட்டவன் வல்லவனாகத்தா னிருக்கின்றான் என்று தெரிவித்தான்.

நிற்க சூரனென்னப்பட்ட ஜோசியனும் அப்பண்ண ஜோசியரும் சில வார்த்தையாடிக்கொள்ளுகிறார்கள்.

சூரஜோசியனுக்கும் அப்பண்ண ஜோசியனுக்கும் வினவிடை.

(சூர்):—ஐயா அரண்மனை அப்பண்ண ஜோசியரே வாருங்கள்.

(அப்):—ஓய் என்காணும் வீண் மமதை கொள்கிறீர்.

(சூர):—ஓய் நானல்லகாணும் வீண்மமதை கொள்ளுகிறவன் நீர்தான்.

(அப்):—நீர் அதிக வல்லமைசாலியோ என்ன தெரிவிப்பாய்.

(சூர):—என் ஓய் அதிகமாய்ப் பேசுகிறீர்.

(அப்):—வாயை மூடுங்காணும்.

[சூர):—நீயும் என்னுடன் மூடிக்கொள்வாய்.

(அப்):—மடையா அதிக வார்த்தையாடாதே.

(சூர):—தடியா நானாடுகிறதும் நீயாடுகிறதும் அரசன்முன் தெரியப்போகிறது.

(அப்):—என்னடா தெரியப்போகிறது.

(சூர):—உன்னுடைய வல்லமையும் என்னுடைய சாமர்த்தியமும்.

(அப்):—நல்லது பார்க்கலாம் ஓய்.

இப்படியாக இருவரும் வார்த்தையாடிக்கொண்டிருக்கும் சமயத்தில் மகாரர்ஜா தன் அரண்மனைக்குச்சென்று ஸ்நானபானம் முதலியவையும் செய்து போஜனமருந்தி சபையில் வந்து சிவஸ்துதி செய்து சிம்மாசனத்தின்கண் அமர்ந்து மந்திரியால் நகர்வளப்பங் கேட்டு தன் சேவகனாகிய சின்னுலாலை அழைத்து கேட்கிறவிதம் காண்பீர்.

(காமே):—அடே சேவகா

(சின்):—அநேக வந்தனம் மகாராஜ

(காமே):—அடே நம்மிட ஆஸ்ட்ரேலியன் பைகோ அரேப்பியன் கோப்டில்லி மட்டம் முதலிய விதம்விதமான வாரிக்குதிரைகளையெல்லாம் ஜீனி போட்டு ஜால் மாட்டி கோச்மேன்கள் தயாராய் கொண்டுவந்திருக்கின்றார்களா தெரிவிப்பாய்.

(சின்):—மகாராஜ் தங்களுத்திரவின்பிரகாரம் நமது கோச்மேன்கள் தயாராய் கொண்டுவந்திருக்கின்றார்கள் பிரபு.

(காமே):—அடே நம்மிட வேடவில்லியர்கள் முதலிய காட்டான்களெல்லாம் ஈட்டி கத்தி, பிச்சுவா தடி வில் துப்பாக்கி முதலிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு தயாராய் வந்திருக்கிறார்களா தெரிவிப்பாய்.

(சின்):—மகாராஜ தங்களுத்திரவின்பிரகாரம் வேடவில்லியர்கள் யாவத்திராளும் வந்திருக்கின்றார்கள் பிரபு.

(காமே):—அடே நம்மிட சோக்ராக்கள் அழகிய புல்ஹேறட் பெர்ஜாக் டைகர் பிளாக்லயன் துமால் கருப்பன் முதலிய நாய்களையெல்லாம் சங்கிலிகள் போட்டு முகத்துக்கு பட்டைதட்டி எல்லோரும் கொண்டுவந்திருக்கின்றார்களா தெரிவிப்பாய்.

(சின்):—பிறபு தங்கள் திருவுளப்பிரகாரம் நமது சோக்ராக்கள் அழகியபொன் சங்கிலிகளும் முகத்துக்கு பட்டைகளும் கட்டி வெகு அழகாக திவீயில் கொண்டுவந்து நின்றிருக்கின்றார்கள்.

(காமே):—சபாஷ் அடே சேவகா அதிருக்கட்டும். நம்மிட அரண்மனை அப்பண்ண ஜோசியரும் சூரஜோசியரும் வந்திருக்கின்றார்களா தெரிவிப்பாய்.

(சின்):—மகராஜ தங்கள் சித்தத்திற்கிணங்கிய இரண்டு ஜோசியரும் வந்திருக்கின்றார்கள் பிரபு.

(காமே):—சபாஷ் அப்படியாகில் சூரஜோசியரை யானழைத்ததாக அதி சீக்கிரத்தி லழைப்பாய்.

(சின்):—மகாராஜ் தங்கள் கருத்தின்படி இதோ அழைத்துவருகிறேன் பிரபு

(காமே):—அதிசீக்கிரத்தி லழைப்பாய்.

(சின்):—இதோ அழைத்து வருகின்றேன்.

சின்னுலால் என்னும் சேவகன் சோல் தரு.

பாலரே உம்மிட தாயாருடன் நீங்கள் பத்திரமாயிருங்கள் என்றமெட்டு
நன்னயமாகவே ஜோசியம் சொல்லும்
நலமுள்ள வீரரே நீர்
ஐயா குணமுள்ள தீரரேநீர்

எங்களரசனுகிய காமேந்திரருங்களை
நாடி யழைத்தாரையா
நீர் சீக்கிரம் வாருமையா,

ஐயா சூரஜோசியரே தங்களை எங்களரசரான காமேந்திரமகாராஜன் அழைத்துவரும்படி கட்டளையிட்டிருக்கின்றார் அதிசீக்கிரமாக வருவீரையா மகாப்பிரபு.

அடே சேவகா இதோ வருகின்றேன் செல்வாய்.

சூரஜோசியனுக்கும் காமேந்திர மகாராஜனுக்கும் வினவிடை.

(சூர):—அரசே நமஸ்கரிக்கின்றேன்.

(காமே):—கல்யாண் ஜோசியரே அமர்வீர்.

(சூர)	சாலிவாகன	ஸகாப்தா	1400
	சுருஷ்டியா	கதாப்தா	3400
	விக்கிரமார்க்க	கதாப்தா	4400
	கொல்லமாண்ட	கதாப்தா	5400
	மஹம்மது ஹிஜரி	கதாப்தா	6400
	ஹூறுணை	கதாப்தா	7400
	ப லி	சகாப்தா	8400
	பிரபவாதி	கதாப்தா	9400
	ராஜா தங்கருடைய	கதாப்தா	10400

நாளது ஆனந்தன் வருடம் தடபட மாசம் 46ந்தேதி பூரணபட்சம் செவ்வாய்க்கிழமை சதுர்த்தசி 7?—93 இன்றையதினம் 99 நாழிகைக்குமேல் ஐந்தேமுக்கால் நாழிகைக்கு தியாச்சியம் சர்வேஷு சுகிஷேபவந்து சயஸ்த சன்மங்களாளி பவந்து ரா த்துவாரே ராஜசமூகே மூதேவிப்ரசாதா பலசித்திரஸ்து

(காமே):—ஐய் ஜோசியரே எனது நாமதேயத்துக்கு சக்கரம் எவ்வாறு ஓடுகின்றது பார்த்துச்சொல்லும் கேட்போம்.

(சூர):—மகாராஜ் தெரிவிக்கின்றேன் கேட்பீர்.

(காமே):—தெரிவிப்பாய்.

(சூர):—மகாராஜ் தங்களுடைய நாமதேயத்துக்கு ராசி எப்ராசியாகத்தானிருக்கின்றது. சக்கரமோ எம். ஆர். சி. மெயில் டிரெயின் இஞ்சின் ஓட்டமாகத்தான் உருளுகிறது. தேவரீர் ராசியின்படிக்கு இன்னும் ஒரு வருஷத்திற்குள்ளாக சுவாமி விவாகசுப மளிப்பர் மகாராஜ.

(காமே):—சபாஷ் ஜோசியரே இப்பொழுது இருக்கிற பாரியோடுஇன்னொரு தாரமும் இருக்கின்றதோ.

(சூர):—சம்பிரமாக மேளதாளங்களோடு இருக்கின்றது பிறபு ஏனெனில் பனி ரெண்டு ராசிகளும் அதனதனிடத்தில் வராமல் இருக்கின்றது மண்டலேஸ்வரா.

(காமே):—ஜோசியரே எதோ தெரிவியும் ராசிகளின் ஸ்தானங்களை சற்று கேட்போம்.

(சூர):—தெரிவிக்கின்றேன் கவனமாய்க் கேட்பீர்.

மேஷம்	ஆட்டுமெந்தையிலிருக்கின்றது
ரிஷபம்	மாட்டுமெந்தையிலிருக்கின்றது
மிதுனம்	ராப்படுக்கை கட்டிலின் மேலிருக்கிறது
சிம்மம்	ஆவாளி மலைதழையிலிருக்கின்றது

கன்னி	எங்கள் அம்மன் வீட்டிலிருக்கின்றது
துலாம்	போலிசெட்டி கல்லாபெட்டியிலிருக்கின்றது
விருச்சிகம்	வீட்டு பரணையின்மேலிருக்கிறது.
தனுசு	தேவரீர் திருக்கையிலிருக்கின்றது
மகரம்	வேலூர் கோட்டை அகழியிலிருக்கின்றது
கும்பம்	கொசப்பேட்டை கொசு சூளைப்பிள்ளையினிடத்திலிருக்கின்றது
மீனம்	கவிச்சிக்கடையில் மெரிபடுகின்றது

இவ்வாறு இந்த ராசிகளெல்லாம் அதனதனிடத்தில் தவறாமலிருப்பதால் தேவரீருக்கு நடக்கப்போகிறது சவர்க்கல்யாணமே. இப்போது தசாநாதன் கையிலிருக்கின்றான். இனி ஒரு வருஷத்திற்குள் காலுக்கு வருவான். அல்ப்பாயு சமஸ்து வம்ஸ நிர்மூலாபி விஸ்த்திரஸ்து ராஜஸ்ய அஸ்ட்டயாம்யார்த்த அவலமஸ்த்து இவ்வாருதானிருக்கின்றது மகாராஜ்.

(காமே):—ஐயா ஜோசியரே நீர் சொன்னதெல்லாம் சரிதான் இன்னொன்று தங்களிடம் கேட்கப்போகின்றேன் அதற்கு சரியாக விடையளிக்கவேணும் விடையளிக்காமற்போனால் தங்களை சிறச்சேதம் செய்வேன்

[சூர]:—நல்லது மஹாப்ரபு தெரிவிப்பீர்.

(காமே):—யான் தெரிவிக்கின்றதை ஊக்கமுடன் கேட்பாய் யாதெனில் எனக்கு கமலாட்சியென்றும் கோமளாவென்றும் மாணிக்கமென்றும் மரகதமென்றும் நான்கு பெண்களுண்டு இந்த நான்கு பெண்களும் ஒன்றுகூடி நந்தவனத்திற் சென்று புஷ்பம் பரித்துக்கொண்டிருக்கையில் மூத்தபெண்ணாகிய கமலாட்சியைக் காணாமல் மற்ற மூன்று பெண்களும் திடுக்கிட்டு ஓடோடியும் வந்து ஐயா எங்கள் அன்புள்ள பிதாவே விளையாட்டுக்காக நாங்களும் எங்கள் பெரிய தமக்கையாகிய கமலாட்சியும் நந்தவனத்திற்குச் சென்று சிறிதுநேரம் அவ்விடம் விளையாடிக்கொண்டிருந்தோம். பிறகு புஷ்பம் பறித்துக்கொண்டிருக்குந் தருணத்தில் எங்கள் தமக்கையாகிய கமலாட்சியைக் காணாமையால் திடுக்கிட்டோடிவந்தோமெனப் புகல அதுகேட்டு ஆச்சர்யமுற்று ஈதென்ன விபரீதமாயிருக்கின்றதென நினைத்து சில தூதரை விடுத்து நந்தவனம் நகரம் வீதி முதலிய பற்பல கிராமங்கள் இன்னுமநேக இடமெல்லாம் தேடி அகப்படாமையால் எவ்விதமாக சென்றிருப்பாளென்று யோசித்துக்கொண்டிருக்குந் தருணம் தாங்கள் என் சபைக்கு வந்தீர். அந்தப் பெண்ணிருக்கும் ஸ்தானத்தையும் அன்னவளைக் கொண்டுவரும் மார்க்கத்தையும் எனக்கு விபரமாகப் புகலவேண்டுமெனக் கேட்டு யான் சொல்லியதைக் கவனித்துணர்ந்தீரா வென அதற்கு

சூரன் கவனித்துணர்ந்தேனென்று மறுமொழி புகன்று சொல்லத் தொடங்கினான். யாதெனில் ஐயா மகாராஜாவே எனக்கு ஓர் விடுதியரை தர வேண்டுமெனக் கேட்டான். அக்கருத்துக்கிசைந்த காமேந்திர மகாராஜன் நல்லதென சம்மதித்து ஓர் விடுதியரை விடுத்தனன். அவ்வரையில் சூரன் புகுந்து தனக்குத்தெரிந்த சாஸ்திர விதிப்படி சக்கரங்கள் போட்டு தன் மனதிற்குத்தானே திருப்தியென நினைத்து வெளியே வந்து ஐயா மகாராஜாவே இப்பொழுது தங்களுடைய குமார்த்தியை எடுத்தேகினவன் ஒரு அரக்கன் அவனுடைய ஊர் சிவகாந்தபுரம் அவன் தங்கள் குமார்த்தியை ஓர் பாறையின்கீழ் பத்திரம் செய்திருக்கிறான். அப்பெண்ணுக்கு யாதொரு துன்பமும் நேரிடவில்லை பத்திரமாகத்தானிருக்கின்றாளென கேட்ட அரசன் மனமகிழ்ந்து சந்தோஷப்பட்டு அப்பெண்ணைக் கொண்டுவருகின்றனையாவென்று கேட்டான். அதற்கு சூரன் சம்மதித்து நான் சென்று அன்னவளை அழைத்து வருகிறேன். ஆறு மாத தவணையம்அதற்குத் தகுந்த சில திரவியங்களும் கொடுக்கவேண்டுமெனக் கேட்டான். அக்கருத்துக்கிசைந்த அரசன் நல்லதென சம்மதித்து சில திரவியங்களும் ஆறுமாத தவணையும் கொடுத்து அந்தப்புறமேகினர்.

நிற்க சூரனென்னப்பட்டவன் புறப்பட்டு அரசவீதியும் வைசிய வீதியும் வரும்போது ஊர் குடிகளெல்லாம் இவனைப் பார்த்து அநேக மரியாதைகள் செய்தார்கள். அம்மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு வீதிகளெல்லாங் கடந்து கடுமலை வனம் வனாந்திரம் இதுகளெல்லாங் கடந்து ஓர் பாட்டையைப்பிடித்துக்கொண்டு தேவகாபுரத்துக்குச் சென்றான். அத்தேவகாபுரத்தைப் பரிபாலனஞ்செய்யும் தேவதந்திரமகாராஜனுடைய குமார்த்தியாகியசெண்பகவல்லிக்கு பயித்தியம் பிடித்திருக்கின்றது. இப்படியே சிலநாளாய் அவ்வூர் கேட்டண்டையிருந்துகொண்டு போகிறவர்களையும் வருகிறவர்களையும் அநேக தொந்தரவு செய்துகொண்டு வருகிறாள். இப்படியிருக்க அவ்வூரார் அநேக பயங்கரமாய் வெளியே போகிறதுமில்லை. வெளியூரார் அவ்வூருக்குள் வருகிறதுமில்லை. ஆனதால் அச்சூரன் அவ்வூருக்குள் புகுந்து ஓர் ஔவையார் வீட்டில் போய் போஜனமருந்தப்போனான். அவ்வவ்வையார் இச்சூரனைப் பார்த்து அதிசயித்து ஐயா நீயார் எந்தவூர் எந்த தேசம் எவ்விடமிருப்பது என்று வினவ அதற்கு சூரன் அக்கிழவியைப் பார்த்து அம்மா என்னத்திற்காக என்னைக் கேட்கின்றீரென்று கேட்டான். அதற்கு அக்கிழவி இவனைப்பார்த்து இவ்வூருக்குள் எப்படி வந்தாயென்று கேட்க அதற்கு சூரன் அம்மா இவ்வூரில் என்ன விசேஷமென்றனன் அதற்கு அக்கிழவி அப்பா இந்நகரினைப் பரிபாலிக்கும் தேவதந்திரமகாராஜன் புத்திரியாகிய செண்பகவல்லிக்கு பயித்தியம் பிடித்து இவ்வூர் கேட்டண்டையிருந்து போகிறவர்களையும் வருகிறவர்களையுந் தொந்தரை செய்துகொண்டிருக்கிறாள். அதனாலும் இவ்வூரார் வெளியே போகிறதுமில்லை வெளியூரார் இவ்வூ

ருக்குள் வருகிறதுமில்லை. ஆனதால்தான் தெரிவிக்கின்றேனென்றனள். அதற்கு சூரன் ஏனம்மா அரசன் மந்திரவாதிகளைக்கொண்டு பார்க்கவில்லையா வென்றனன். அதற்கு அக்கிழவி அப்பா எத்தனையோ மந்திரவாதிகளைக்கொண்டு பார்த்தார்கள். யாராலும் முடியவில்லை யெனக்கேட்ட சூரன் அக்கிழவியைநோக்கி ஏ அம்மா நீ அரசனிடம் சென்று அயோமுகியென்னும் பட்டணத்திலிருந்து ஒருவர் வந்திருக்கின்றார் அன்னவர் உன் புத்திரிக்கு பிடித்திருக்கிற பைத்தியத்தை நிவர்த்தி செய்தால் என்ன தருகிறீரென்று கேள். அதற்கு அன்னவன் என்ன தெரிவிக்கிறான் அதைக் கேட்டு சீக்கிரத்தில் வந்து தெரிவிக்க வேண்டுமென்றுரைத்தான். உடனே அக்கிழவி சூரனுடைய வார்த்தைக்கிசைந்து நல்லதென சம்மதித்து அந்நகரினைப் பரிபாலிக்கும் தேவதந்திரமகாராஜனிடஞ்சென்று ஐயா மகாராஜனே தங்களுடைய குமார்த்திக்கு பிடித்திருக்கிற பைத்தியத்தை நிவர்த்தி செய்யும்படி அயோமுகியென்னும் பட்டணத்திலிருந்து ஒரு மாந்திரீகர் வந்திருக்கின்றார். அன்னவர் தங்களுடைய குமார்த்திசெண்பகவல்லிக்கு பிடித்திருக்கிற பைத்தியத்தை நிவர்த்திசெய்தால் அன்னவருக்கு என்ன தருகிறீரென்று கேட்டாள். அதற்கு தேவதந்திரமகாராஜன் கூறுகின்றான். அம்மா அன்னவன் உனக்கென்னவேணும் தெரிவிப்பாயென்று கேட்டான். அதற்கு அன்னவர் என் புத்திரனாகவேண்டுமெனத் தெரிவித்தாள். அவ்வார்த்தையைக்கேட்ட தேவதந்திரமகாராஜன் அன்னவன் என்புத்திரிக்கு பிடித்திருக்கும் பைத்தியத்தை நிவர்த்திசெய்தால் அன்னவனுக்கு என் புத்திரியை விவாகம் செய்துக்கொடுப்பதும் தவிர என் இராஜியத்தில் பாதி தருவேன் அப்படி அவன் நிவர்த்திசெய்வதாக ஒப்புக்கொண்டுவந்து நிவர்த்தி செய்யாமற் போனால் சிரச்சேதம் செய்வேனெனத் தெரிவித்தனர். அவ்வார்த்தையைக் கேட்ட அக்கிழவி திடுக்கிட்டு ஓடோடியும் வந்து சூரனிடத்தில் ஏ அப்பா நீ சொன்னவாறே நான் அரசனிடம் சென்று தெரிவித்தேன் அதற்கன்னவர் ஏ அம்மா என் பெண்ணுக்கு பிடித்திருக்கும் பைத்தியத்தை நிவர்த்திசெய்தால் அப்பெண்ணை அன்னவருக்குக் கொடுத்துதிருமணம் செய்துவைப்பதுமன்றி என்னிராஜியத்திலேயும் பாதி தருகிறேன். இல்லாவிடில் அன்னவனை சிரச்சேதம் செய்வேனென்று தெரிவித்தான் என்றனள். அவ்வார்த்தையைக்கேட்ட சூரன் மிகுந்த சந்தோஷங்கொண்டு அக்கிழவியை போஜனம் சீக்கிரம் சமைக்கும்படி ஆச்யாபித்தான். உடனே அக்கிழவி சீக்கிரம் போஜனம் சமைத்து சூரனுக்கு அளித்தான். சூரன் போஜனமுண்டு தாம்பூலத்தரித்து சற்று இளைப்பாரி அக்கிழவியினிடத்தில் உத்திரவுபெற்றுக்கொண்டு புறப்பட்டு வீதிகளெல்லாங் கடந்து அரசன் அரண்மனைக்குப் போகும்போது வழியில் ஓர் மதியில் பாதவனைப் பார்த்து சூரன் கேட்கின்றவிதம் கண்ணீர்கள் பேர்களே

(சூர):—ஆ ஹா நீ யாரப்பா வெகு அழகாயிருக்கின்றாய் உன்னுடைய பல்லழகென்ன முகத்தழகென்ன உன் காலில் போட்டிருக்கிறமஞ்சள் ஜோடு உன் அழகுக்கேற்றதாயிருக்கின்றது. நீ எந்த ஊர், உன் பெயரென்ன தெரிவிப்பாயப்பா.

(மதி):—எனக்குத் தெரியாது.

(சூர):—அப்பா வுன்பெயர் தெரியாமற்போனால் போகட்டும் உன் தாயார்தகப்பனார் பெயரையாவது தெரிவிப்பாய்.

(மதி):—அதுவும் எனக்குத் தெரியாது.

(சூர):—அப்பன் பெயர் ஆத்தாள்பெயர் தெரியாமற்போனால் போகட்டும் நீ என்ன ஜாதி தெரிவிப்பாய்.

(மதி):—நானும் என் தகப்பனும் ஒருஜாதி என் தாயார் வேறேஜாதி.

(சூர):—சபாஷ் அதெப்படியப்பா.

(மதி):—நானும் என் தகப்பனாரும் ஆண் ஜாதி, என்தாயார் பெண்ஜாதி என்றான்.

(சூர):—நீ எப்போ பிறந்தாய் உன் வயதென்ன தெரிவிப்பாயப்பா.

(மதி):—பிறந்த வருஷத்தின் பெயரும் இத்தனை வருஷமென்றும் சொல்லத் தெரியாது. ஆனால் ஒரு குறிப்பு சொல்லுகிறேன் கேள். என் தகப்பன் இறந்துபோன மறு வருஷம் என் தாயார் இறந்துபோனாள். அதற்கு மறு வருஷம் நான் பிறந்தேனென்றான்.

(சூர):—சபாஷ் நல்ல குறிப்பு ஏதாவது படித்திருக்கின்றாயா என்ன.

(மதி):—நீ படி நான் என் படிக்கின்றேன். படித்தால் எங்கள் வீட்டில் ஆயிவருகிறதில்லை. என் பாட்டன் படித்தானா என் தகப்பன் படித்தானா நான் படிக்க ஒய். கேள் ஒய் நீர் சகலகலா 'வித்தையும் கற்று கடையாபறந்து போக உன் காலிடறி குட்டிச்சாத்தானாக படித்து கலெக்டர் வேலை பார்த்தவர்களெல்லாம் கட்டகந்தைக்கு பஞ்சமா யிருக்கிறார்கள். சப் மாஜிஸ்டிரேட்டு வேலை பார்த்தவர்களெல்லாம் சாக்கடைக்காலாக நாறி இருக்கிறார்கள். படித்தவர்கள்பாடெல்லாம் இடிவிழுந்துபோக என்னையேன் படிக்கச் சொல்லுகின்றனை. போ ஐயா படிப்பிணையேயென்றான்.

(சூர):—அடா நடப்பிணமே அடுக்குகிற அருமை உடைக்கிற பூனைக்குத்தெரியுமா குயவனுக்கு பலநாள் வேலை தடிகாரனுக்கு ஒரு நிமிஷ வேலை யென்பதுபோல வருந்திக்கற்றவர்கள் கல்விப்பெருமை இகழ்ந்து பழிக்கிறவனுக்கு என்ன தெரியும் தெரியாது பின்னும் ஒருவன் சால வித்தைசா

யும் கற்றிருப்பது உத்தமம் அல்லது தன் சுயபாஷையாவது கற்றிருப்பது மத்திமம் கல்லாமலே யிருந்த தன்மையாயிருப்பது எல்லாவற்றிலும் அதமம். மேலுமோ "வித்யாவிஹீனம் பஸு" என்பதுபோல கல்வியில்லாதவன் மிருகத்திற்குச் சமானமானவன் என்பார்கள். நீ படியாமற்போனால் போகட்டும் இதோ உனக்கு முன்பாகப் போட்டிருக்கும் பலஹாரையை எண்ணி யெடு பார்ப்போம்.

(மதி):—எனக்கு எண்ணத்தெரியாது.

(சூர):—எண்ணத் தெரியாமற்போனால் போகட்டும் என்ன காரியமாகப் போகின்றனை தெரிவிப்பாய்.

(மதி):—உன் வீட்டுப்பெண்ணை கலியாணஞ் செய்யப்போகிறேன்.

(சூர):—என் வீட்டுப் பெண்ணை கலியாணஞ் செய்துகொண்டு என்ன செய்கிறதப்பா.

(மதி):—செய்கிறது எனக்குத் தெரியாதோ நீ கற்றுக்கொடுக்கவேண்டுமோ யாதெனில் நான் அவளுக்கு சமைத்துப் போடுகிறதும் மிளகாயரைத்துக் கொடுக்கிறதும் இன்னும் வீட்டிலுண்டான வேலைகளைச் செய்கிறதும் அன்னவள் புடவையைத் தோய்த்துப்போடுகிறதும் அன்னவளிடம்முறத்தால் அடி பட்டுக்கொள்ளுகிறதும் இது தெரியாதா ஐயா.

(சூர):—சபாஷ் சபாஷ் இப்படிப்பட்ட மாப்பிள்ளைதான் வேண்டியது வெகு சௌக்கியம். ஒரு ஆள் கம்பளம் கூடி வருமெனறு சொல்லி மனதில் சந்தோஷங்கொண்டு தான் இந்த விருத்தத்தை சொல்லலாயினன்.

கலிப்பா விருத்தம்.

ஆலைபலா வாக்கலாமோ அருஞ்சுனங்கள்
வாலைநிமிர்க்க வசமாமோ நீலநிறக்
காக்கைதனை பேசுவிக்கலாமோ
கருணையிலிம் மூர்க்கனை சீராக்கலாமோ.

என்று இவ்விருத்தத்தை தனக்குத்தானே சொல்லிக்கொண்டு வீதிகளெல்லாங் கடந்து அரசவீதிக்குச் சென்று அரண்மனை வுள்நுழைந்து அவ்விடம் காவல் புரியும் சேவகனிடத்தில் மாந்திரீக சூரன் வந்திருப்பதாக அரசனுக்கு தெரிவிப்பாயென்றான். அவ்வார்த்தையைக் கேட்ட சேவகன் ஓடோடியும் சென்று ஐயா மகாராஜாவே நமதரண்மனை வாயலில் யாரோ ஒருவர் வந்திருக்கின்றார். அன்னவரை யாரென்று வினவினேன். அதற்கன்னவர் மாந்திரீகசூரனென்று தெரிவித்தார். அவரைப் பார்த்தால் நமது குழந்தைக்கு பிடித்திருக்

கும் பைத்தியத்தை நிவர்த்தி செய்வார்போல தோற்றுகின்றதென்று தெரிவித்தான். அவ்வார்த்தையைக் கேட்ட தேவதந்திரமகாராஜன் தன் சேவகனைப் பார்த்து கூறுகின்றார். அடே சேவகா எத்தனையோ மாந்திரீகர்கள் வந்து ஒன்றும் முடியாமற் போய்விட்டதே இவனும் இப்படிதானாகுவனென அதற்கு சேவகன் அப்படி ஒருக்காலுமாகாது இவன் நிவர்த்தி செய்வானெனக்கேட்ட அரசன் நல்லதென சம்மதிக்க சேவகன் ஓடோடியும் வந்து ஐயா மாந்திரீக சூரரே வும்மை எங்களரசனாகிய தேவதந்திரமகாராஜன் தங்களை அழைத்து வரும்படி கட்டளையிட்டிருக்கின்றார். வாருமையாவென அவ்வார்த்தையைக் கேட்ட சூரன் சந்தோஷசாகரத்தில் மூழ்கினவனாய் உட்சென்று சிம்மாசனத்தின்கண் வீற்றிருக்கும் தேவதந்திர மகாராஜனைக் கண்டு அநேக வந்தனம்புரிந்து கூறுகிறான். ஐயா மகாராஜாவே தங்களுடைய பெண்ணுக்கு பிடித்திருக்கும் பைத்தியத்தை நிவர்த்தி செய்யும்படிக்காக வந்திருக்கிறேனென்றனன். அவ்வார்த்தையைக்கேட்ட தேவதந்திர மகாராஜன் சூரனைப்பார்த்து கூறுகிறான். ஐயா நீர் யாவர் எவ்விடமிருப்பதென்று கேட்க அதற்கு சூரன் ஐயா நானிருப்பது அசோகா பட்டணம் இப்பொழுது கொஞ்சம் வேலையாக சிவகாந்தபுரத்துக்குப் போக வருகையில் இவ்வூரில் நேற்றையதினம் தங்களிடம் வந்த கிழவியினிடம் போஜனமருந்தப் போனேன். அக்கிழவி எவ்வூரப்பாவென்று கேட்டாள். அதற்கு என் ஊரைத்தெரிவித்து இவ்வூரில் ஏதேனும் ஆச்சர்யமுளதோவென அதற்கு கிழவி இவ்வூரின் அரசபுத்திரிக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது. எத்தனையோ மாந்திரீகர்களும் வைத்தியர்களும் வந்து பார்த்தார்கள் யாராலும் முடியவில்லையென்று தெரிவித்தாள் அதைக்கேட்டு யான் அக்கிழவியினிடத்தில் தங்களிடம் போக விடைகொடுத்தேன். அதே பிரகாரம் அக்கிழவி தங்களிடம் வந்து யான் தெரிவித்ததை தெரிவித்தனளாம். அதற்கு தாங்கள் தெரிவித்ததையும் எனக்கு தெரிவித்தாளென்று தெரிவித்து நான் தாங்கள் அக்கிழவியினிடம் தெரிவித்தவாறே ஒப்புக்கொண்டு வந்திருக்கின்றேன் அதற்கு வேண்டிய சாமக்கிரியைகள் வேண்டுமென்று தெரிவித்தான். அவ்வார்த்தையைக்கேட்ட தேவதந்திர மகாராஜன் புன்சிறிப்புகொண்டு நல்லதென சம்மதித்து ஓர் விடுதியரை விடுத்து வேண்டிய சாமக்கிரியைகளும் கொடுத்து அந்தப்புறமேகினன். இதுநிற்க,

சூரன் புறப்பட்டு பெண்ணிருக்கும் கோட்டண்டை சென்றுதனக்குத்தெரிந்த மந்திரபலத்தால் அப்பெண்ணருகிற் சென்று சண்பகவல்லியென்றழைத்தான். உடனே அப்பெண் இவனோடுகூடவே வந்து சூரனுக்கு விட்ட விடுதியறையில் வந்தாள் சூரன் மோகனவல்லியை உட்காரவைத்து அன்னவளுக்குச் செய்யவேண்டிய கடமைகளெல்லாம் செய்து அன்னவளுடன் ஒரு தாதியைவிடுத்து நீராட்டச்செய்து பிறகு நாலு ஐந்து தினம் பொறுத்து தேவதந்திரமகா

ராஜனிடம் சென்று ஐயா மகாராஜனே தங்களுடைய பெண்ணுக்குப் பிடித்திருந்த பைத்தியத்தை நிவர்த்தி செய்துவிட்டேன். தாங்கள் வந்து பார்த்து அரண்மனைக்கு அழைத்து வாருங்களென்று தெரிவித்தான் அவ்வார்த்தையைக் கேட்ட தேவதந்திரமகாராஜன் மனமகிழ்ந்து சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவராய் அந்தப்புறம் சென்று தன் பத்தினியாகிய மனோல்லாசனியை அடி கண்மணி யென்றழைக்க உடனே மனோல்லாசனி திடுக்கிட்டு நாதனிடம் வந்து நாதா யாது விசேஷமென அவ்வார்த்தையைக் கேட்ட தேவதந்திரமகாராஜன் கண்மணி நமது குமார்த்திக்கு பிடித்திருக்கிற பைத்தியம் மாந்திரீக சூரரால் நிவர்த்தியாய்விட்டதெனக் கேட்ட மனோல்லாசனி அதிக சந்தோஷத்துடன் ஒருபுஜம் இருபுஜமாகப் பூரித்து தன் நாதனைப்பார்த்து புன்சிறிப்புகொண்டு நாதா தாங்களும் நானும் சென்று நமது குமார்த்தியாகிய சண்பகவல்லியைப் பார்த்து வருவோமெனக் கூற தேவதந்திரமகாராஜன் கேட்டு நல்லதென சம்மதித்து இருவரும் யேகோபித்து பெண்ணிருக்கும் அரண்மனையை நாடிவந்து தன் பெண்ணைப்பார்த்து அம்மா சண்பகவல்லியென அழைத்தனர். தாயையும் தகப்பனையும் பார்த்து மானமுற்று ஓர்புறம் போய் நின்றனள். அதைக்கண்ட தேவதந்திர மகாராஜனும் மனோல்லாசனியும் புன்சிறிப்புகொண்டு அருகிற் சென்று கண்மணி இதற்காக ஏன் மானமுற்றனை. அன்றெழுதிய பிரமன் அழித்தெழுதுவானா எழுதமாட்டான். ஆனதால் நமதில்லத்திற்குச் செல்வோமென அழைத்துக்கொண்டு புறப்பட்டு அரசன் அரண்மனைக் கேகினர். பிறகு சூரனையும் அழைத்துக்கொண்டு போய் இருவருக்கும் ஸ்தானபானம் முதலியனவும் செய்வித்து போஜன முதலியனவும் அளித்தார்கள், பின்பு மாந்திரீக சூரனுக்கும் சண்பகவல்லிக்கும் ஆடையாபரணங்களணிந்து நல்ல சுப முகூர்த்தத்தில் விவாகம் செய்ய எத்தனித்து சகல தேசத்தரசர்களுக்கும் மணவோலை யனுப்பினன். அதேபிரகாரம் சகல தேசத்தரசர்களும் வந்தார்கள். பிறகு சூரனும் சண்பகவல்லியும் மணக்கோலத்துடன் வந்து மணப்பந்தலில் உட்கார்ந்து சகலபிராமணர்கள் வேதமோத மங்கல்ய ஸ்திரீகள் ஆசீர்கூற சகல ஆடம்பரத்துடன் திருமங்கல்யதாரணம் செய்தான். பிறகு பெண்ணையும் பிள்ளையையுமெழுப்பி விடுதியறையி லிருக்கச்செய்து போஜனமளித்தார்கள். பின்பு மற்ற நாளும் அதே பிரகாரமாக பொழுது போக்கினார்கள். மூன்றும்நாளிரவு பெண்ணையும் மாப்பிள்ளையையும் சிங்காரித்து ஓர் விடுதியறையில் கட்டில் சிங்காரித்து தின்பண்டங்களும் வைத்து பிராமணர்கள் புத்திரசந்தானம் உண்டாகவேண்டுமென ஆசீர்வதித்து முன்சொன்ன அறையில் விடுத்தார்கள். அதேபிரகாரம் இருவரும் உட்சென்று சுகபோகங்கள் அனுபவித்திருந்தார். இப்படியே சிலநாளிருந்து யாதும் குறைவில்லாமல் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான். இப்படி நிகழுகையில் ஓர்நாள் சூரன் நித்திரையிலிருக்கும்போது தான் தேடிவந்த பெண்

ளாகிய கமலாக்ஷியிடம் இவன் போனதாகவும் தான் அந்தப் பெண்மணியிடத்தில் பேசிக்கொண்டிருக்கையில் அரக்கன் என்பவன் வந்துவிட்டதாகவும் அந்த அரக்கனோடு போர்புரிந்ததாகவும் அவன் கினவுகண்டு விழித்துக்கொண்டான். விழித்துப் பார்த்தால் ஒன்றும் காணோம். தன் அருகில் சயனித்திருக்கும் சண்பகவல்லியை எழுப்பி கண்மணி யானொன்று தெரிவிக்கின்றேன். அதற்குத் தகுந்த விடை கொடுக்கவேண்டுமெனக் கூற அவ்வார்த்தையைக் கேட்ட சண்பகவல்லி நாதா இது யென்ன ஆச்சரியமாயிருக்கிறது தெரிவிப்பீரென அதற்கு சூரன் தெரிவிக்கின்றான். அடி கண்மணி நான் ஒரு காரியார்த்தமாக போக வரும்போது இவவூரிலுள்ள ஓர் கிழவியால் உன்னைக் கண்டேன். என் பெரியோர்கள் செய்த பூஜாபலத்தாலும் நான் செய்த அதிர்ஷ்டத்தாலும் வுன்னை மணம்புரிந்தேன். இப்பொழுது நான் நாடிவந்த காரியத்திற்குச் செல்லவேண்டியவனாய் இருககிறேன். நீ யாதொரு தடையும் சொல்லாமல் போக விடை கொடுப்பாயடி கண்மணி என அவ்வார்த்தையைக் கேட்ட சண்பகவல்லி திடுக்கிட்டு ஓவெனக்கதறி நாதா என்னை மணம்புரிந்து விடுத்துச்செல்ல தங்களுக்கு நீதியா அல்லது என்னை இப்படி செய்யவேண்டுமென்று எத்தனை நாளாய் மனதில் வைத்திருந்தீரோ அல்லது என் மனதை சோதிக்கும்படி தெரிவித்தீரோ யாது மரியாத பாவியாகிய என்னை மணம்புரிந்து தங்கள்பேரில் பக்ஷமுறும்படி செய்துவிட்டு இப்படிப்போவது நன்கல்லவென்று தெரிவித்து தன் கண்களில் தாரைதாரையாக நீர் சொரியவிட்டு அழத்தொடங்கினாள். அன்னவள் அழுகிறதைப்பார்த்து சூரன் சொல்லுகின்றான். அடி கண்மணி இதற்காக ஏன் வருத்தப்படுகின்றனை. நான் சென்று அதி சீக்கிரத்தில் வந்துவிடுகின்றேனென்று தேறுதல் சொல்லி கண்மணி யான் சென்று நான் நாடிவந்த காரியத்தை முடித்துக்கொண்டு பத்து தினத்தில் வந்துவிடுகிறேனென்று தெரிவித்து தன் மாமனாகிய தேவதந்திர மகாராஜனிடத்திலும் தன் மாமியாகிய மனோரஞ்சனியிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு அவ்வூரைவிட்டு சிவகாந்தபுரத்துக்குப் போகும்வழியில் ஓர் வனமிருந்தது. அவ்வனத்தைச் சுற்றிப்பார்க்கையில் அதிலொரு பெண்மணி அழகிற் சிறந்தவளாக ஓர் மேடைமீதுவீற்றிருந்தனள். அன்னவளை சூரன் கண்டும் காணாதவன்போல போகையில் அம்மாது சிரோன்மணி இன்னவனைப் பார்த்து எழுந்தோடிவந்து எதிரில் நின்று ஐயா நீர் யாவர் இங்கு வரவேண்டிய காரணமென்ன எங்கு செல்லுகிறீர்கள் என்று வினவ அவ்வார்த்தையைக்கேட்ட சூரன் திடுக்கிட்டு பெண்ணே நீ யார் இவ்விடத்தில் தனியாயிருக்கவேண்டிய தென்னவென அவ்வார்த்தையைக் கேட்ட பெண் ஐயா நானிருப்பது இந்திராபுரம் இவ்வனம் தேவகன்னிகையினுடைய வனம். நரமனுஷர்கள் வரப்போகாது. நீ வந்துவிட்டனை. ஆனபோதிலும் சம்மதமல்ல. நானொரு வார்த்தை சொல்லுகிறேன் கேள். யாதெனில் இதோ என்னெதிரில் இருககும் மரத்தில் ஓர் கிளை யொடித்துக்கொண்டு செல்வாய் யா

தொரு தீங்கும் நடவாது. அதிசீக்கிரம் சென்றுவிடுவாயென அவ்வார்த்தை
யைக்கேட்டு நல்லதென சம்மதித்து அப்பெண்மணியினிடத்திவ்விடைபெற்று
புறப்பட்டுப் போகையில் அடர்ந்த கானகமொன்று தெரிந்தது அக்கானகத்தில்
ஓர் அரக்கனும் அரக்கியும் வாசஞ்செய்திருந்தார்கள். சூரன் அவ்வனத்திற்போ
கும்பொழுது அரக்கன் இறைதேடப் போனான். அரக்கியிருந்தனள். அங்கு
போகும் சூரனைப் பார்த்து அவ்வரக்கி மோகமாகி சூரன்முன் ஓடோடியும்
வந்து ஐயா நீர் இவ்விடம் வந்துவிட்டீர். நான் தங்களைப் பார்த்து மோகமாகி
னேன். இப்பொழு தென்னைச்சேர்ந்து சுகமனுபவிக்கவேண்டுமென்று வேண்
டினள். அவ்வார்த்தையைக் கேட்ட சூரன் சட் பாதகி நானொரு காரியார்த்த
மாகப் போகிறவனை மடக்கி சேரென்றாய். உன் வார்த்தை யிங்கு செல்லாது.
வழிவிடுவாயென்று தெரிவிக்க அதற்கு அவ்வரக்கி இப்பொழுது என்னைச்
சேருகின்றாயா அல்லது சேரமாட்டாயா என்ன தெரிவிக்கின்றாயென அவ்
வார்த்தையைக் கேட்ட சூரன் நான் சேரமாட்டேனென்றனன். உடனே அவ்
வரக்கி தன் கரங்களிலிருந்த வளையல்களை யொடித்து கீரிக்கொண்டு ஓவென்ற
சப்தத்துடன் நாதா யாரோ ஒருவனிம்மறுவனத்தில் வந்து என்னை சேரவழைக்
கின்றானே யென்று புலம்பும் குரலைக்கேட்ட அரக்கனோடிவந்து கண்மணி
உன்னையா சேரவழைத்தான் இதோ அன்னவனைக் கொன்றுவிடுகிறேன் பா
ரென்று சூரனிடம் சென்று அடே மடையா என் அருமைக் கண்மணியை
நீயா சேரவழைத்தவன் இதோ பார் என் கையா லுன்னைக் குத்தி எமபுரம்
சேர்ப்பேனெனத் தெரிவித்தான். அவ்வார்த்தையைக் கேட்ட சூரன் அடே
ராக்ஷதப் பூச்சே என் வீணில் மடிகின்றாய் அடே வுலகத்தில் பெண்கள்வார்த்
தையைக் கேட்டு மடிந்தவர்கள் அநேகம் பெயர் வேண்டாம் நான் சொல்வதை
கேட்டுப் போய்விடுவாயென அவ்வார்த்தையைக்கேட்ட அரக்கன்மென்மேலும்
கோபங்கொண்டவனாய் சூரனை ஓர் குத்து குத்தினான். பிறகு சூரன் அக்குத்
தை தனது கரத்தால் தடுக்கி ஓர் குத்து குத்தி அவ்வரக்கனை பூமியின்மீதுதள்ளி
மடித்தான். பிறகு அவ்வரக்கி ஓடோடியும் வந்து நான் தெரியாமல் வீணான
வார்த்தை தெரிவித்ததால் நீர் அன்னவனோடு போர்புரிந்து மடிந்துவிட்டீரே
என்ன செய்வேன் இனி எப்படி வுய்வேனென்று அழுதுக்கொண்டிருந்தாள்
பிறகு சூரன் அவ்விடம்விட்டு புறப்பட்டு சிவகாந்தபுரத்தை நாடி வருகையில்
இவனுககு பசி யதிகரித்தமையாலும் அருந்த நீர் கிடைக்காமலும் அநேக
இளைப்புடன் வந்து ஓர் சத்திரத்தைக் கண்டான். கண்டதும் சந்தோஷமாகி
னான். சந்தோஷமாகி உள்ளே சென்று அருந்த நீர் வேண்டுமென அதற்கு அச்
சத்திரகாரன் இச்சூரனுக்கு அருந்த தீர்த்தம் கொடுத்து சற்று இளைப்பாற்றி
பிறகு போஜனத்திற்கும் சித்தப்படுத்தி சூரனுக்கு இட்டனன். சூரன் அப்போ
ஜனத்தை யுண்ட பிறகு சத்திரக்காரன் தாம்பூலங்கொடுத்தான். பிறகு சத்திரக்
காரன் சூரனைப் பார்த்து ஐயா தாங்கள் எவ்விடமிருப்பது எவ்விடத்தை நாடிச்

செல்லுகிறீர். தயைபுரிந்து தெரிவிக்கவேண்டுமென அதைக்கேட்ட சூரன் அச்சத்திரக்காரனைப் பார்த்து ஐயா சத்திரக்காரரே யான் இருப்பது அசோகா பட்டணம். இப்பொழுது சிவகாந்தபுரத்துக்குப் போகின்றேன். என்பெயர் சூரனென்று தெரிவித்தான். அப்பெயரைக்கேட்ட சத்திரக்காரன் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவனாய் ஐயா தாங்கள் யாது காரியார்த்தமாக போகிறீர். எனக்குத் தெரிவிக்கவேண்டுமென வேண்ட அவன் கருத்துக்கிசைந்து சூரன் தெரிவிக்கின்றான். ஐயா சத்திரக்காரரே யான் ஒரு காரியமாக செலலுகிறேன் வரும்போது தங்களிடம் வந்து தங்கள் மனம்போல எல்லா சங்கதிகளையும் தெரிவிக்கிறேனென்று தெரிவித்து அச்சத்திரக்காரனிடம் விடைபெற்று காடு மலை வனம் வனாந்திரமெல்லாங் கடந்து சிவகாந்தபுரத்தை நாடிப் போகும்போது வழியில் ஓர் நதியொன்று வோடுகிறது. அந்நதியிலிறங்கி அப்புறம் போகும்போது ஓர் பெரிய வனமொன்று தோன்றினது. அவ்வனத்தில் ஓர் காட்டானை சூரனைக்கண்டு அடே நரப்பக்ஷணமே நீ இந்த வனத்தில் யாதுகாரியமாக வந்தனை எனக்குப் புகலவேண்டுமெனக் கூற சூரன் திரும்பிப் பார்த்து ஒருவருமில்லாமையால் இது என்ன ஆச்சர்யமாயிருக்கின்றதென மனதில் நினைத்து இவ்விடத்தில் யார் இருக்கின்றார்கள். ஒருவருமில்லையோ என சுற்றிப் பார்த்தான். பார்க்கும்போது அக்கினிமூலையிலிருந்து ஓர் கஜமொன்று ஓடிவந்து அடே நரப்பயலே இதோ வந்துவிட்டேன். யான் இரண்டுமூன்று நாளாக யாதுமில்லாமலிருந்தேன். நல்ல சமயம் நீ யெனக்கு இரையாகவந்தனை இதோ வுன்னைப் புசிக்கின்றேன் என்று தனது துதிக்கையை நீட்டிக்கொண்டு வந்தது. சூரன் அந்த கஜத்தைப்பார்த்து ஓ கஜமே நீ யேன் வீணில் மடியப் போகின்றாய். வேண்டாம் சென்றுவிடுயென்று தெரிவித்தான். உடனே கஜமானது அடே மடயா யானா செல்லுவேன், ஒருக்காலும் செல்லமாட்டேன். உன்னைக் கொன்று புசிப்பதற்கு வந்தால் நீ இவ்வாறு தெரிவிக்கின்றாயே. இதோ பார் என்று உலகம் நடுங்கும்படி ஓர் இறைச்சலிட்டது. அவ்விறைச்சலுக்கு கொஞ்சமேனும் நெஞ்சமஞ்சாமல் இதோ பார் உனைக் கொல்கிறேனென்று தனது கரத்தை ஓங்காரமாக யெடுத்து ஒரு கரத்தில் துதிக்கையும் மற்றொரு கரத்தில் வாயுமாக பிடித்து கிழித்தெறிந்துவிட்டு அரசனிடம் தெரிவித்த கெடுவு தப்பிப் போய்விடுகிறதே என்று மனக்கிலேசங் கொண்டு மான் வேக மனோவேகமாய் போய்க்கொண்டிருந்தனன். போகும்போதுஓர் நந்தவனமொன்று தோன்றினது. அந்நந்தவனத்தைக்கண்டு இதுதான் சிவகாந்தபுரமென யோசித்து மெல்லெனப் போகுஞ்சமயம் அச்சிவகாந்தபுரத்தைப் பரிபாலனஞ் செய்யும் மகாராஜன் புத்திரியாகிய சிவசுந்தரி தன் நந்தவனத்தில் சில சகிகளுடன் புஷ்பம் பரித்திருந்தனள். இவன் அந்த வழியே செல்ல அச்சிவசுந்தரி இவனைப்பார்த்து காமமுற்று தன் சகிகளைப்பார்த்து அடி சகிகாள் அதோ செல்லுகின்ற புருஷனைப் பார்த்தீரா அவர் முகமழகும் அவர் உருவத்தினழகும்

அவர் கண்ணழகும் அவர் கன்னத்தினழகும் அவர் கையழகும் அவர் மார்பழகும் இவ்வளவழகுள்ள புருஷனையல்லவோ சேரவேணும் அடி சகி நீ யதிசீக்கிரத்தில் சென்று அவ்வழகிய புருடனை யான் அழைத்ததாக அதிசீக்கிரத்தில் அழைத்துவாவென்றுரைத்தனள். அவ்வார்த்தைக்கிசைந்த தோழியானவள் ஓடோடியும் சென்று சூரனைக்கண்டு ஐயா அழகினில் மன்மதனைப்போலவிளங்கும் புண்ணியபுருடரே தங்களை எங்களரசியாகிய சிவசுந்தரி அழைத்துவரும்படி தெரிவித்தாள். தாங்கள் வரவேண்டுமென்று அழைத்தனள். அவ்வார்த்தையைக்கேட்ட சூரன் இது என்ன ஆச்சரியமாகயிருக்கிறது. பெண்ணே நீயார் உன்னை உன்னரசி அழைத்தாளென உரைக்கின்றாய் அன்னவள் யார் எனக்கு ஒன்றும் தோற்றப்படவில்லை. நல்லதிருக்கட்டும் நான் ஒரு காரியமாய் செல்லுகின்றேன் வரும்பொழுது வருகிறேனென்று தெரிவித்து நடக்கலுற்றான் அவ்வார்த்தையைக்கேட்ட தோழியானவள் ஆச்சர்யமுற்று சபாஷ் இது என்ன புதுமை நன்றாயிருக்கின்றது. ஓர் பெண் தங்கள்மீது மையல்கொண்டு அழைத்தாளென்று நான் தங்களை வந்து அழைத்தால் ஏதோ காரியமாக செல்லுகிறேனென்றும் வரும்போது வருகிறேனென்றும் தெரிவிக்கின்றீரோ இது உனக்கு ஞாயமாக யிருக்கின்றதா வேண்டாம் என்பின் வாருமென்றழைத்தாள் அதைக்கேட்ட சூரன் அடி பெண்ணே ஓர் பெண் அழைத்தாளென்று நீ அழைத்தால் வுன்பின் நான் வருவேனோ ஒருக்காலும் வரமாட்டேன் சென்றுவிடுவாயென்றுரைத்து போய்க்கொண்டிருந்தான். அச்சூரன் உரைத்துச் செல்வதைப் பார்த்த தோழிப்பெண் ஓடோடியும் தங்கள் எஜமானியாகிய சிவசுந்தரியிடம் வந்து அம்மணி தாங்கள் எனக்குக்காட்டிய புருஷனிடஞ்சென்று தாங்கள் அழைத்ததாக அழைத்து அநேகவித போதனைகளைத் தெரிவித்தேன். அதற்கன்னவர் அடி பெண்ணே ஒரு பெண்ணழைத்தாளென்று நீ யழைத்தால் நான் ஒருக்காலும் வரமாட்டேன் சென்றுவிடுவாயென்று தெரிவித்துப் போகின்றாரென்று தெரிவித்தாள். அவ்வார்த்தையைக்கேட்ட சிவசுந்தரி காமவாதை சகியாதவளாய் தான் தனிமையாக புறப்பட்டு ஓடோடிச்சென்று சூரனை எதிர்நோக்கி பாதம்பணிந்து தெரிவிக்கின்றாள்.

சிவசுந்தரி - தரு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

மோகமானேன் ஜாலமேனோடா யென்ற மெட்டு.

பல்லவி.

காதலானேன் கட்டிச்சேரடா

அநுபல்லவி.

அடா கன்னுளா எந்தனை நீ முத்தமது
தருகுவாயடா (சாத)

சரணம்.

மாரனம்புபாயுதே மன்மதாயும்மைக்கோறுதே
ஏனோயின்னம்தாமதம் ஏந்திழையாளென்செய்வேன்
இப்பொழுதே சேரவாடா (காத)

மன்னனுனைக்கண்டு மதுபானமதையுண்டு
மாராயின்னம்வாறயேன் மயங்குதடாயெந்தனெனி
மாரி மாரி லீலைசெய்வாய் (காத)

தானாய்வந்தமாதைநீ தவிக்கவிட்டுப்போகாதே
தாளேனே யிப்பாவியான் தரணியில்லீலைகள்செய்து
தங்கிநீயும் செல்வாயடா (காத)

சிவசுந்தரி வசனம்.

காதலா யான் தங்களைக்கண்டு மோகமுற்று என் தோழிகளை விட்டனுப்பினல் யேதோ தெரிவித்துவிட்டுப் போகுறீரே. இது தர்மந்தானு ஓர் பெண் தங்களை வந்து என்னைச் சேரென்று வேண்டினல் தடுக்கப்படாது. தயை செய்து தாங்கள் வந்து என்னை சேர்ந்து சுகமனுபவித்துச் செல்வீர்கண்ணாளா.

சூரன்-தரு-இ-ம் பார்சி அடதாள சாப்பு.

ராஜராஜ என்ற வர்னமெட்டு.

பெண்மணிசிவசுந்தரியே பிரியநாயகி
பேதையே கண்மணி எந்தன்வார்த்தையை
பிரியமாய்கேட்பாய்
கண்ணே ஒரு காரியமாக
கடுகெனச் செல்கின்றேன்
கண்மணியேநான் வருகும்போது
கண்டென்னைப்போற்றேன்
வர்மம்வைத்து செல்கிறேனென்று
வருத்தப்படவேண்டாம்
வாராமல் போவேனென்று மனதில்நினையாதே
நீ மனதில் நினையாதே
நீ மனதில் நினையாதே. (பெண்மணி)

கண்மணி சிவசுந்தரி யான் சொல்வதைக்கேள். யாதெனில் நான் ஒருகாரியமாகச் செல்கின்றேன். அக்காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வரும்போது உன்னிடம் வந்து சிலநாளிருந்து செல்லுகின்றேன். சூதாகத் தெரிவிக்கின்றேனென நினைக்கவேண்டாம். அவசியமாக வருகின்றேன் கண்மணி.

சிவசுந்தரி தரு-இ-ம் பார்சி-தாளம்-ஆதி.

ஜப்தகலந்தரு பந்தனுபிரதா என்ற மெட்டு.

கண்ணாளாவுந்தனை கண்டுமையல்கொண்டேன்
 காதலைத்தீர்ப்பாய் மன்னவா

வாதைசகியேன் வந்துயெந்தனை
 மருவிடவருவாய் மன்னவா

நீயும்வந்து எந்தனைச்சேர்ந்து
 நில்லாமல் போவாய்

சேராமற்போனால் நில்லாதென்னாவி
 ஐயாநானே யென்னசெய்வேன்
 அணைந்து செல்குவாய் (கண்ணா)

சிவசுந்தரி வசனம்.

நாதா நான் தங்களைக்கண்டு காமமுற்று சேரென்று அழைத்தால் போய் வருகிறேனென்று தெரிவிக்கின்றீரே தாங்கள் சென்றால் என்னாவி நில்லாது எவ்விதத்திலும் என்னைச்சேர்ந்து சுகமனுபவித்து சென்றுவிடுவீர் கண்ணாளா.

அதைக்கேட்ட சூரன் புன்சிறிப்புகொண்டு அடியென் சரசநாயகி உன்னிஷ்டப்படியே நான் இன்றையதினம் வந்து நாளையதினம் என் காரியத்திற்குச்செய்வேன். உன் சம்பதி யெப்படியிருக்கிறது தெரிவிப்பாயென அதைக்கேட்ட சிவசுந்தரி நல்லதென சம்மதித்து இருவருமாக புறப்பட்டு சந்தோஷமாக நந்தவனத்திற்சென்று தன் தோழிப்பெண்களையழைத்து திவ்யபோஜனஞ்செய்யும்படி ஆக்கியாபித்தாள். அவ்வார்த்தையைக்கேட்ட தோழிப்பெண்கள் அதிசீக்கிரமாய்ச்சென்று பதினெட்டுவித பச்சடியோடும் இருபத்துநான்குவித அருசுபதார்த்தங்களோடும் நல்லுணவுசெய்து சித்தப்படுத்தி தன் எஜமானியாகிய சிவசுந்தரிக்கு தெரிவித்தார்கள். உடனேசிவசுந்தரியும் சூரனுமாகபோஜன அறைக்குச்சென்று இருவருமாக போஜனம்புசித்து தாம்பூலந் தரித்தானபிறகு மறுபடியும் சிவசுந்தரி தோழிகளையழைத்து என் கருத்துக்கிசைந்த தோழிகளே

நீங்கள் அதிசீக்கிரமாக கடைவீதிக்குச்சென்று தின்பண்டங்களும் திவ்ய பரிமள மிருந்த நருமலர்களும் வாங்கிவரும்படி ஆக்கியாபித்தாள். அதன்படியே தோழிகள் சில திரவியமெடுத்து கடைவீதிக்குச்சென்று சில தின்பண்டங்களும் பரிமளமிருந்த நருமலர்களும் வாங்கிவந்து சிவசுந்தரிக்கு தெரிவித்தார்கள். மறுபடியும் சிவசுந்தரி தன் தோழிகளையழைத்து என்பிரிய தோழிகளே நீங்கள் அதிசீக்கிரத்தில் நமது படுக்கையறைக்குச் சென்று மஞ்சத்தை ஜோடிப்பீரென அதன்படியே நல்லதென தோழிகள் மஞ்சத்தை ஜோடித்து தெரிவித்தார்கள். பிறகு சூரனும் சிவசுந்தரியும் போஜனசாலைக்குச்சென்று போஜனம் புசித்து தாம்பூலந்தரித்து படுக்கையறைக்கு சென்று மஞ்சத்தின்மே லிருவரும் சிறிதுநேரம் சரசசல்லாபமாயிருந்து பிறகு சூரனைப்பார்த்து நாதா எனக்கோர் அழகிய கதை சொல்லவேண்டுமென கேட்க அப்பொழுது சூரன் சிவசுந்தரியைப்பார்த்து சொல்லுகிறான் கண்மணி யென்ன கதை சொல்வேண்டுமெனக் கேட்க நாதா தங்களுக்குத்தெரிந்த ஓர் அழகியகதை சொல்லவேண்டுமென வேண்ட அக்கருத்துக்கிசைந்த சூரன் கதை சொல்லத்தொடங்கினான்.

அடி கண்மணி ஓர் ஊரில் ஓர் அரசகுமாரனிருந்தான். அவன் ஓர் நாள் தன் நகாசோதித்து வருந்தருணம் அவ்வூரில் ஓர் வியாபாரியினுடைய பெண்ணைக்கண்டு மோகமாகி அன்னவளுடைய கருத்தை அரியுமாறு தன் மந்திரியிடந்தெரிவித்து ஆள்விட்டனுப்பும்படி ஆக்கியாபித்தான். அதன்படியேமந்திரி காவலாளிகளையனுப்ப அக்காவலாளிகள் சென்று அப்பெண்மணியைக் கண்டு அம்மா தங்களை எங்களரசன் கண்டு மோகமாகினன். அன்னவனைச் சேர்ந்தால் நல்ல சுகமனுபவிப்பாய் என்று சொல்ல அக்கருத்துக்கிசைந்த அப்பெண்நல்லதென சம்மதித்து அக்காவலாளிகளோடு செல்ல உடனே அவ்வரசகுமாரன் அன்னவளை காந்தர்வ விவாகம்புரிந்து சிலகாலம் சுகமனுபவித்து புத்திரமித்திரர்களோடு வாழ்ந்து சிலநாளையில் அப்பெண் இறந்துபோயினள். பிறகு அரசன் அப்பெண்மேல் கொண்ட ஆவலால் அவனுமிறந்துபோனானென்று கதையை முடித்து பிறகு சிறிதுநேரம் சரசசல்லாபமாயிருந்தார்கள். சூரியன் வடதிசையிலுதித்தான். சூரன் எழுந்து பெண்ணே யெனக்குப் போக விடைதாவேண்டுமென அக்கருத்துக்கிசைந்த பெண் நாதா தாங்கள் சென்று அதிசீக்கிரத்தில் வருகின்றீராவென்று கேட்க அப்படியேவருகிறேனென்று தெரிவித்து சிவசுந்தரியிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு ஓர்நாளெல்லாம் அக்குகையைத்தேடி அகப்படாமல் மறுநாள் அக்குகையைக்கண்டு அதினுள் சென்று சுற்றிப்பார்த்தான். அங்கு ஓர் பெண் அமர்ந்திருந்தாள். அப்பெண்மணியைக் கண்டு அடி பெண்பாவாய் கமலாக்ஷி நீ யென்னுடன் வருவாயென அதைக் கேட்ட கமலாக்ஷி இதயென்ன புதுமையென அறிந்து ஐயா நீங்கள் யாவர் எவ்விடமிருந்து வந்தீர் எனக்கு விபரமாய் புகலவேண்டுமென வேண்ட

அதற்கு சூரன் கண்மணி யானிருப்பது அசோகாபட்டணம் கனகாபுரிக்கு வந்தேன். வந்து உன் தகப்பனாகிய காமேந்திர மகாராஜனைக் கண்டு வந்தனமளித்தேன் அதற்கன்னவர் நீர் யாவரென நான் ஜோசியனென்று தெரிவித்தேன். அதற்கவர் எனக்கொரு ஜோசியம் சொல்லவேண்டுமென அதற்குநான்யாதுக்கு ஜோசியம் சொல்லவேண்டுமென்று கேட்க ஐயா ஜோசியரே எனக்கு நான்கு பெண்களுண்டு அந்நான்கு பெண்களும் நந்தவனத்தில் சென்று புஷ்பம் பறித்துக்கொண்டிருக்கையில் பெரிய பெண்ணாகிய கமலாட்சியைக் காணமையால் மற்ற மூன்று பெண்களும் திடுக்கிட்டு ஓடோடியும் வந்து அப்பா எங்கள் தமக்கையாகிய கமலாக்ஷியைக் காணோம் எங்கு தேடிப்பார்த்தும் அகப்படவில்லை என்று தெரிவித்தார்களானதால் அப்பெண் எவ்விடமிருக்கின்றாள் அதை யெனக்கு தெரிவிக்கவேண்டுமென்றனர். அப்படியே நான் தெரிவித்தேன் ஆனால் நீர் அப்பெண்ணை கொண்டுவருவீராவென்று வினவினர். கொண்டுவருகிறேனென்று பதிலுரைத்தேன். அப்படியாகில் நீ சென்று சீக்கிரம் அழைத்து வாருமென்று எனக்கு சில திரவியமெடுத்துக்கொடுத்து என்னை அனுப்பினார். ஆனதால் நானுன்னை அழைத்துப்போக வந்தேன். நீ யென்னோடு வருவாயென அதைக்கேட்ட பெண்மணி தன் மனதிற்குள்ளேதானே சந்தோஷங்கொண்டு நமக்கு நல்லகாலம் வந்ததென்ன தீர்மானித்து சூரனுக்கு திவ்யபோஜனமளித்து ஐயா அரக்கன் வரும் நேரமாய்விட்டது. வந்துவிடுவான் பொல்லாதவன் தங்களைப்பார்த்தால் புசித்துவிடுவானென்றனள். அதைக்கேட்டு சூரன் பெண்ணே யான் ஒன்று சொல்லுகிறேன் கேள் யாதெனில் அவ்வரக்கன் வந்தால் அவனோடு பேசாமலிரு அதற்கவன் உன் அருகில் வந்து பெண்ணே யேன் மனவருத்தமுற்றனை யென்று வினவுவான் அதற்கும் நீ பேசாமலிரு மறுபடியும் உன்மீதிலிருக்கிற பிரியத்தால் வற்புறுத்துவான் அதற்கு நீ ஐயா பூதராஜனே நான் இத்தனை நாளாய்த் தங்களிடமிருந்து வாழ்கின்றேன் தங்களுக்கு எதிரி யாராவது யிருக்கின்றார்களா என்னவென்று கேள் அதற்கவன் என்ன தெரிவிக்கின்றான். அதை கேட்டுக்கொள் நான் நாளையதினம் வருகிறேனென்று தெரிவித்தான். அதைக்கேட்ட கமலாக்ஷி ஐயா உங்களுக்கு இரவுக்கு உண்டி வேண்டுமே யென்று சில பலகாரஞ் செய்துக்கொடுத்து போவென்று அனுப்பினாள். அப்பலகாரத்தைப் பெற்றுக்கொண்டு நாலையதினம் வருகின்றேனென தெரிவித்து அக்குகைக்கெதிரில் ஓர் பெரிய ஆல விருக்ஷமிருந்தது அம்மரத்தின்மேலேறிக்கொண்டான்.

இதுநிற்க இரைக்குச் சென்றிருந்த அரக்கன் சில தின்பண்டங்களை ஏந்திக்கொண்டு குகைக்கருகில் வந்து உள்நுழைந்து கண்மணி கமலாக்ஷியென அழைக்க அதற்கவள் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தாள் பிறகு அரக்கன் கமலாக்ஷியினருகில்வந்து அடி கண்மணி என்மீது வுனக்கென்ன கோபம் இத்

தனைநாளாய் வந்ததும் ஓடிவருவாயே இன்றையதினம் வுனக்கென்ன தீங்கு நேர்ந்தது கூறுவாயென அதற்கு கமலாக்ஷி ஐயா பூதராஜனே எனக்கு யாராலேயும் தீங்குநேரிடவில்லை. தங்கள்மீதில் எனக்கு கோபமுமில்லை. யாதெனில் தாங்களென்னையழைத்துவந்து ஆறுமாத தவணையாய்விடுகிறதே தங்கள் பாரியையாக வேண்டுமே உமக்கு யாராகிலும் தீங்குசெய்பவ ரிருக்கின்றார்களா அல்லது உமக்கெதிரியாவது இருக்கின்றார்களா தெரிவிக்கவேண்டும் தெரிவிக்காவிட்டால் உம்முடைய பாத அடியிலேயே வுயிரை மாய்த்துக்கொள்வேனெனத் தெரிவித்தாள். அதைக்கேட்ட அரக்கன் அடி பைத்தியக்காரி உனக்கு விவேகமில்லை. நீ மனக்கோணலில்லாமல் கேட்டால் சொல்லமாட்டேனா அடிபேதையே சொல்லுகிறேன்கேளென்று சொல்லத்தொடங்கினான். அடி கண்மணி எனக்கு மனிதராலேயும் ரிஷிகளாலேயும் இன்னும் மற்றுமுள்ளவர்களாலேயும் தீங்கில்லாமல் சாக்ஷாத் பரப்பொருளாகிய எம்பெருமானால் வரம்பெற்றிருக்கின்றேன். ஆனால் ஒன்றுண்டு அதை தெரிவிக்கிறேன். யாதெனில் இக்குகைக்கு நேராக பதினைந்துமைல் விஸ்தாரத்தில் ஓர் கானகமொன்றுண்டு அக்கானகத்தில் ஓர் அடர்ந்த ஆலவிருக்ஷமிருக்கின்றது. அந்த விருக்ஷத்தின் உச்சியில் ஓர் கிளையில் ஓர் வண்டு கூடுகட்டியிருக்கிறது. அவ்வண்டு வுயிரும் என்வுயிரும் ஒன்று அவ்வண்டை நசுக்கினால் நான் நசுங்கிவிடுவேன். அதன் காலையொடித்தால் என் காலொடியும் அதன் சிரசையொடித்தால் என் கையொடிந்துபோகும் இப்படியிருக்கின்றதேதவிர என்னை ஜெயிக்க ஒருவராலேயும் முடியாது இதுதான் என்மர்மம் என்று தன் சங்கதியை சொல்லிமுடித்தான். உடனேகமலாக்ஷியெழுந்து காலுக்கு நீர்கொடுத்து போஜன முதலியவையிட்டு தன்படுக்கையில் போய் படுத்துக்கொண்டாள். பிறகு அவ்வரக்கனும் தன் படுக்கையறையில் போய்படுத்து தனக்குத்தானே யோசனை செய்கின்றான். அடஅடா ஈதென்ன ஆச்சர்யம். நாம் சுமார் நான்கு மாதம்வரையில் இவளுக்கு காவல்புரிந்திருக்தோம். இன்றையதினமென்னமோ ஏதோ மருந்திட்டாப்போல் நாம் அழைத்தோம். அவள் வாய்திரவாமலிருந்தாள். மறுபடியும் அருகில் சென்று கேட்டோம் அதற்கவள் ஏதேதோ தெரிவித்தாள். நமக்கு ஒன்றுந்தோன்றாமல் நாம் மர்மத்தை வெளியிட்டோமே. இது என்னபுதுமை ஆ ஹா அறியாமல் மோசம் போனோம். நான் ஏன் சொன்னேன் அடே மடமனமே அற்பபெண்ணுக்காக தைரியத்தை விட்டுவிட்டாயே என்று சிறிதுநேரம் மனம்நொந்தான் மறுபடியும் சொன்னபோதிலும் பெரிதல்ல இவ்விடம் யார் வரப்போகிறார்கள் நாம் இவ்விடம் இந்த பெண்ணைக்கொண்டுவந்தது யாருக்குத்தெரியும் ஒருவருக்கும் தெரியாது, அற்பமனமே இதற்காகவா கலங்கினை கலங்காதேயென்று தேறுதல் செய்துக்கொண்டே நித்திரைசெய்தான். மறுபடி காலையிலெழுந்துவழக்கம் போலே தான் செல்வதைப்போலே சென்றான்.

இதுநிற்க இவ்வரக்கன் வந்ததையும் காலையிலெழுந்து போனதையும்பார்த்துக்கொண்டிருந்த சூரன் மரத்தைவிட்டுக் கிழிறங்கி குகைக்குள் சென்று கமலாக்ஷி ஜெயந்தானோவென்று வினவினன். அதைக்கேட்ட கமலாக்ஷி ஓடோடியும் வந்து சூரன் பாதம்பணிந்து ஐயா ஜெயந்தான் போஜனஞ்செய்யும் பிறகு தெரிவிக்கிறேனென்று போஜனசாலைக் கழைத்துச்சென்று சூரனுக்கு உண்டியளித்தாள். அவ்வுண்டியை சூரன் புசித்து தீர்ந்ததும் தாம்பூலங்கொடுத்தாள் தாம்பூலந் தரித்தானதும் சூரன் எதிர்நின்று கூறுகிறாள் ஐயா மஹானுபாவரே யான் சொல்வதைக்கேளுமென்று சொல்லத்தொடங்கினாள். தாங்கள் தெரிவித்தது போல அரக்கன் வந்ததும் கண்மணி கமலாக்ஷியென்றழைத்தான். அதற்குநான் மறு வார்த்தை கூறாமலிருந்தேன். பிறகு என்னருகில் வந்து காதலி யென்மீது என்ன கோபம் தெரிவிப்பாயென்று கேட்டான். அதற்கு நான் அப்பா பூதராஜனே நான் வந்து சுமார் நாலுமாதமாகிறது. இன்னும் இரண்டு மாதமானால் நான் தங்களுக்கு பாரியையாகவேண்டுமே தங்களுக்கு யாராகிலும் எதிரியிருக்கின்றார்களா அல்லது யாரால் உம்மைக்கொல்லமுடியும் எனக்கு தெரிவித்தாலாச்சுது இல்லாவிட்டால் தங்கள் பாத அடியிலேயே என் வுயிரை மாய்த்துக்கொள்வேனென்றேன். அதற்கப்பூதம் அடி வைபத்தியக்காரி இதற்காகவா வுயிரை மாய்த்துக்கொள்ளப்போகின்றாய். சொல்லுகிறேன் கேளென்று கூறினான். யாதெனில் தன்னை யாராலேயும் வெல்ல முடியாதென்றும் பரமசிவனிடத்தில் வரம்பெற்றிருக்கிறேனென்றும். தன்னுயிர் இச்குகைக்கு நேரே பதினைந்து மைல் விஸ்தாரத்தில் ஓர் ஆலவிருட்சமிருக்கிறதென்றும் அவ்விருக்ஷத்தில் ஓர் வண்டிருக்கிறதென்றும் அதனுயிரும் தன்னுயிரும் ஒன்றென்றும் அதன் காலையொடித்தால் தன் காலொடியுமென்றும் அதை நசுக்கி உயிர் மாய்த்தால் தன்னுயிர் மடிந்துவிடுமென்றும் தெரிவித்தான் உடனே நானெழுந்து அவனுக்கு போஜனமளித்து என் படுக்கையில் படுத்துக்கொண்டேன். பிறகு காலையில் எழுந்து சென்றுவிட்டான். இதுதான் சங்கதி வேறொன்றுமில்லை யென தெரிவித்தாள். அவ்வார்த்தையைக்கேட்ட சூரன் புன்சிறிப்புகொண்டு கமலாக்ஷியோடு சொல்கின்றான். கமலாக்ஷி நான் சென்று அவ்வண்டை மாய்த்துவிட்டு வருகிறேனென தெரிவித்தான். அவ்வார்த்தைக்கிசைந்த கமலாட்சி நல்லதென சம்மதித்து உண்டி சமைத்து போஜனமருந்தச்செய்து கட்டமுது கட்டிக் கொடுத்து சீக்கிரத்தில் வாருமென்று தெரிவித்தனுப்பினாள். அவ்வாறே நல்லதென சம்மதித்து உடனே புறப்பட்டு அம்மரத்தைத் நாடிச் செல்லும்போது வழியில் காடு மலை வனம் வனாந்திரம் இதுகளையெல்லாங் கடந்து அம்மரத்தைக்கண்டு அம்மரத்தின்மேலேறி அவ்வண்டைப்பிடித்து ஓர் கயற்றில் கட்டி தன் மடியில் வைத்துக்கொண்டு மரத்தைவிட்டுக் கிழிறங்கி காடு மலை வனம் வனாந்திரமெல்லாங்கடந்து குகை அருகில்வந்து கமலாக்ஷியென அழைத்தான் அக்குறலைக் கேட்ட கமலாட்சி ஓடோடியும் வந்து ஐயா என்னவென்று கேட்டாள். அதற்கு

சூரன் சொல்லுகிறான் அடி பெண்பாவாய் இதோ பார்த்தனையா அவ்வரக்கன் என் மடியிலிருக்கிறானென்று தன் மடியிலிருந்த வண்டை யெடுத்துக்காண்பித்தான். அவ்வண்டைப்பார்த்து சந்தோஷப்பட்டு பாவி தொலைந்தான் என்று மனதில் நினைத்துக்கொண்டிருக்கும் சமயத்தில் அரக்கன் வெகு ஆங்காரமுடனே வந்து சூரனைக்கண்டு அடே யாரடா என் குகைக்குள் வந்தவனென கேட்க அதற்கு சூரன் அரக்கனைப்பார்த்து அடே மடையா உன்னைக்கொல்லவந்த எமன் நான்தான் என்றான். அவ்வார்த்தையைக்கேட்ட அரக்கன் திகிலடைந்து ஆஹா அற்பப்பெண்ணால் நமக்குத் துன்பம் நேரிட்டதேயென மனங்கலங்கி அடே நீயா என்னைக் கொல்லவந்த எமன் இதோ பார் உன்னைக் கொல்லுகிறேனென்று எழுந்து மல்லுக்கு அழைத்தான். சூரன் எழுந்து அடே மடயா நீயா யென்னை மல்லுக்கழைக்கிறவன் இதோ பாரென்று இரு கரத்தையும் வலுவாகப் பிடித்து நோங்கி ஒரு குத்து குத்தினான். அக்குத்துக்கு அரக்கன் சற்றேனும் சலியாமலிருந்ததைக்கண்ட சூரன் அடடா இவனை நாம் கொல்லமுடியாதென்று மனதில் நினைத்து அடே இப்பொழுது என்ன தெரிவிக்கின்றாயென அதற்கு அரக்கன் அடே சண்டாளா என் வீணாய் மடிகின்றாய் வேண்டாம் சென்றுவிடுயென்று சொன்னான். அவ்வார்த்தையைக்கேட்ட சூரன் அடே மடையா இதோ வுன்னைக் கொன்றுவிடுகிறேன் பாரென்று தன் மடியிலிருந்த வண்டை நசுக்கிவிட்டு கீழேபோட்டு தன் காலினால் அதை தேய்த்துவிட்டான் உடனே அரக்கனும் கீழேவிழுந்து மடிந்துவிட்டான். சூரன் அரக்கனை யெடுத்து செய்யவேண்டிய சடங்குகளெல்லாம் செய்துவிட்டு கமலாக்ஷியை அழைத்து சீக்கிரம் சமையல் செய்யும்படி ஆக்யாபித்தான். அவ்வாறே கமலாட்சி அதி துரிதத்தில் சமயல் செய்து சூரனுக்கிட்டு பிறகு தானுமுண்டு இருவரும் தாம்பூலந்தரித்து சிறிதுநேரம் வார்த்தையாடிக்கொண்டிருந்து அவ்விடத்திலிருந்த சில திரவியங்களையும் ஆடையாபரணமெல்லா மெடுத்துக்கொண்டு கமலாக்ஷியை அழைத்துக்கொண்டு சிவகாந்தபுரத் தாச புத்திரியாகிய சிவசுந்தரியிருக்கும் நந்தவனத்தில் வந்து அங்கு காவல்புரியும் ஓர் சேவகனிடத்தில் சூரன் வந்திருப்பதாக தெரிவிப்பாயென்று சொன்னான் அவ்வார்த்தையைக் கேட்ட சேவகன் அதிதுரிதமாக சென்று தோழிகளிடத்தில் அம்மா நமதுவாசற்படியே யாரோ சூரனென்பவர் நமதரசியாகிய சிவசுந்தரியைக் காண வந்திருக்கின்றார். அதை நமதரசிக்குத் தெரிவிப்பாயென அவன் சொன்னதைக் கேட்ட தோழி சந்நிதியில் சென்று அம்மா முன்வந்த சூரனென்பவர் வந்து உங்களைக் காணவேண்டுமென்கிறார். உள்ளேவரும்படி ஆக்யாபிக்கவேண்டுமென வேண்ட அதைக்கேட்ட சிவசுந்தரி தானே யெழுந்து ஓடிவந்து சூரனைககண்டு பாதம் பணிந்து உள்ளே அழைத்துச்சென்று ஓர் ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து உடனே தோழிகளையழைத்து சீக்கிரமாக போஜனம் சித்தப்படுத்தும்படி ஆக்யாபித்தான் அவ்வாறே தோழிகள் சென்று போஜனம் சித்தப்படுத்தி சிவசுந்

தசிக்குத் தெரிவித்தனர். பிறகு சிவசுந்தரி சூரனையும் கமலாக்ஷியையும் ஸ்நான பான க்ஷேமநிஷ்டை யாவும் முடிப்பிக்கச்செய்து இருவருக்கும் பதினெட்டுவித பச்சடியோடும் இருபத்துநான்குவித அரும்பதார்த்தங்களோடும் திவ்யான்ன சுகபோஜனமளித்து தானும் புசித்து தாம்பூல முதலானதும் தரித்துக்கொண்டு மூவரும் மனோல்லாசமாய் நந்தவனத்திற்சென்று அவ்விடத்தில் புஷ்பித்திருக்கும் சுறுமணம் வீசும் மணமலர்களைபறித்து விளையாடிக்கொண்டிருக்கையில் பூரணச்சந்திரன் உதயமாயினன். அச்சமயத்தில் சிவசுந்தரி சூரனைக் கண்டு மோகித்து அவனோடு சரச வார்த்தைகளாடி தன்னைப்புணரும்படி வேண்டினள். அதைக்கேட்ட சூரன் பெண்ணே யான் முன்பு உன்னிடம் ஒரு காரியார்த்தமாக செல்கிறேனென்று தெரிவித்தேனே அது இதோ நம்மோடுகூடயிருக்கின்ற கமலாக்ஷியின் பொருட்டுதான் ஆகையால் யான் இப்பெண்ணுக்கெதிரில் யாதொரு காரியமும் செய்யக்கூடாது என்றனன். அதைக்கேட்ட சிவசுந்தரி நாதா இப்பெண் யாவள் இவளுடைய வாலாற்றை எனக்கு விபரமாய்ப் புகலவேண்டுமென்றனள், அதைக்கேட்ட சூரன் கூறுவதாயினன்.

கனகாபுரியைப் பரிபாலனஞ்செய்யும் காமேந்திர மகாராஜன் குமார்த்தியாகிய இப்பெண் தனது சகோதரிகள் நால்வருடன் நந்தவனத்திற் சென்றுமலர் பறித்துக்கொண்டிருக்கையில் அகஸ்மாத்தாய் யாவருக்குந் தெரியாமல் ஓர் அரக்கன் இவளை யெடுத்துக்கொண்டுபோய் சிவகாந்தபுரத்தில் ஓர் பாறையின் கீழ் வைத்து இவளுக்கு வேண்டிய உணவாதிகளைக் கொண்டுவந்து கொடுத்து பத்திரமாய் பாதுகார்த்துக்கொண்டிருந்தான். இதையறியாத இப்பெண்ணின் தகப்பன் தமது குமார்த்தியை யாரோ அழைத்துக்கொண்டு போய்விட்டனரென்று சேவகர்களை விடுத்து தேடிப்பார்த்து எங்கும் அகப்படாமையால்வனத்திலுள்ள மிருகஜாதிகள் ஏதாவது தூக்கிக்கொண்டுபோய் பக்ஷித்துவிட்டதோவென்று பலவாறு தன் நிலைதடுமாறி தத்தளித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் யான் அவ்விடஞ்சென்று இச்சங்கதிகளைக் கேள்வியுற்று என்னுடைய சோதிட வல்லமையினால் இப்பெண்ணை அரக்கன் கொண்டுபோய் வைத்திருக்கும் திசையையறிந்து அரசனுக்குத் தெரிவித்தேன். அதற்கவர் ஐயா சோதிடரே அப்பெண்ணைக்கொண்டுவர தங்களால் முடியுமாவெனக் கேட்டார் நான் ஆறு மாதத்தில் தங்கள் பெண்ணைக் கொண்டுவருகிறேனென்று தவணை வைத்து விட்டு சிலவிற்கு வேண்டிய சில திரவியங்களைப் பெற்றுக்கொண்டு சிவகாந்தபுரத்தை நாடிச்செல்லுகையில் உன்னைக்கண்டு ஓரிரவு உன்னிடமிருந்து பிறகு வெகு பிரயாசையோடு அவ்வரக்கனுடைய பாறையைக் கண்டு இப்பெண் அதிலிருப்பதைப்பார்த்து இவளுக்கு சில தந்திரவார்த்தைகளைப் போதித்து அரக்கனுடைய உயிர்நிலையை அறிந்துகொள்ளும்படி சொல்லிவிட்டு அன்றிரவெல்லாம் ஓர் ஆலவிருக்ஷத்தின்பேரில் தங்கியிருந்து மறுநாட்காலையில் பெண்ணினால் அவன் உயிர்நிலையையறிந்து அவனைக்கொன்றுவிட்டு இவளை யழைத்துக்

கொண்டுவந்தேன். யான் வந்து ஆறுமாதமாகிறது ஆகையால் இப்பெண்ணைக் கொண்டுபோய் தகப்பனிடம் சேர்த்துவிட்டு பிறகு யான் இவ்விடம் வந்து உனதிஷ்டம்போல் இருந்துவிடுகிறேனென்றனன். அதைக்கேட்ட சிவசுந்தரி இவனுடைய சமர்த்தினைப் புகழ்ந்து இப்பேர்ப்பட்ட புருடனையல்லவோ விவாகம் செய்துக்கொள்ளவேண்டும். ஆகையால் இதை நமது தந்தையிடம் தெரிவித்து இவரையே விவாகஞ்செய்துக்கொள்ளலாமென்று நினைத்து தன் அரண்மனைக்கு வந்து தாதிகளிடம் தந்தையை அந்தப்புறத்திற்கு யானழைத்ததாக அழைத்துவாருங்களென்றனள். தாதிகள் அவ்விதமே அரசனிடஞ்சென்று வேந்தே தங்கள் குமார்த்தி தங்களை அந்தப்புறததிற்கு அழைத்துவரும்படி ஆக்யாபித்தனள் என்றனள். அரசன் உடனே எழுந்துவந்து தன் குமார்த்தியை நோக்கி குழந்தாய் என்னை யாது காரணமாக இவ்விடமழைத்தனை யென்றனர் சிவசுந்தரி தன் தந்தையின் பாதம் பணிந்து தான் கோறிவந்த விஷயமனைத்தும் புகன்று அந்தப்புருடனையே எனக்கு விவாகம் செய்விக்கவேண்டுமென்றள். அதைக்கேட்ட அரசன் சந்தோஷித்து நல்லது அப்புருடன் எவ்விடமிருக்கின்றான் தெரிவிப்பாயென சிவசுந்தரி கூறுகிறாள். தந்தையே அப்புருடர் என்னுடைய நந்தவனத்தில் வந்திருக்கின்றார். தாங்கள் பார்க்கவேண்டுமாகில் சேவகரை யனுப்பி அழைத்துவரும்படி ஆக்யாபிப்பீரென்றனள். அவ்விதமே அரசன் சேவகரை யழைத்து நமது குமார்த்தியினுடைய 'வனத்தில் வந்திருக்கும் புருடனை யானழைத்தாக அழைத்துவருவீரென் றாக்யாபித்தனர். உடனே சேவகர் நந்தவனத்திற்குச்சென்று சூரனைக்கண்டு ஐயா தங்களை அரசன் அழைத்துவரும்படி கட்டளையிட்டனர் தாங்கள் வரவேண்டுமென சூரனும் நன்றென சம்மதித்து சேவகருடனே அரண்மனைக்கு வந்தனன். இவன் வருவதைக்கண்ணுற்ற அரசன் இவனை தன்னருகிலழைத்து ஐயா நீர் எவ்விடமிருப்பது உமது தாய் தந்தையரின் நாமதேயமென்ன? யாது காரியமாக இவ்விடம் வருகலாயினீர் இவையனைத்தும் விவரமாய்ப் புகலவேண்டுமென, சூரன் கூறுகிறான்.

அரசே! யானிருப்பது அசோகா பட்டணம் என் தாய்தந்தையர் இறந்துவிட்டனர். என் பெயர் அசாசூரன் யான் அயோமுகியென்னும் பட்டணத்தின் அரசன்புத்திரியாகிய மோகனவல்லியை விவாகப்புரிந்துசுகமாய்வாழ்ந்துகொண்டிருந்தது முதல் இதுபரியந்தம் நடந்த சங்கதிகளனைத்தும் ஒன்றேனும் விடாமல் சிவசுந்தரியிடம் கூறியிருக்கின்றேன். தங்களுக்கும் ஒருசமயம் சிவசுந்தரி தெரிவித்திருப்பாள். அதிருக்கட்டும் தாங்கள் யாது காரியார்த்தமாக என்னை இவ்விடமழைப்பித்தீரென்றனன். அரசன் இவனைப்பார்த்து ஐயா சூரரே தங்களுடைய சமாசாரமனைத்தும் சிவசுந்தரி என்னிடம் தெரிவித்து தங்களையே விவாகம் செய்துக்கொள்ளவேண்டுமென்ற அபேக்ஷையுள்ளவளாயிருக்கின்றமையால் தாங்கள் அவளை விவாகம் செய்துக்கொண்டு எனக்கும் மைந்தனில்லாததினால் இவ்விராஜ்ஜியத்தை எனக்குப் பின்பு அரசாக்ஷி செய்துகொண்டு

சௌக்கியமாய் வாழ்ந்துகொண்டிருக்கலாமென்றனன். அதைக்கேட்ட சூரன் அவ்விதமே நன்கெனச்சம்மதித்துக்கூறுவதாயினன். அரசே யான் உமதிஷ்டம் போல் சிவசுந்தரியை விவாகஞ்செய்துக்கொள்ளத்தடையில்லை. இபபோது யான் அழைத்துக்கொண்டுவந்திருக்கும் பெண்ணை அவள் தாய்தந்தையரிடம் கொண்டுபோய் சேர்ப்பிக்கவேண்டும். அவர்களுக்கு யான் வைத்துவிட்டுவந்த தவணை ஆறு மாதமாய்விட்டபடியால் இன்னும் வரவில்லையேயென்று எதிர் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஆகையால் தாங்கள் ஒன்று செய்யவேண்டியது. அதாவது இப்பெண்ணின் தகப்பன் கனகாபுரியைப் பரிபாலனஞ் செய்யும் காமேந்திர மகாராஜனாகையால் அவருக்கு என் விவாகத்தைக்குறித்து மண வோலை யெழுதி யனுப்பும்பொழுது தங்களுடைய பெண்ணாகியகமலாக்ஷியை சூரனென்பவர் எனது இராஜ்ஜியத்திற்கு அழைத்துவந்திருக்கின்றனர். ஆகை யால் தாங்கள் உடனே புறப்பட்டு வந்து விவாகம் நடந்தேரியபின்பு கமலாக்ஷி யை அழைத்துக்கொண்டு போகவேண்டியது என்று விவரமாய் எழுதியனுப்பி னால் அவர்கள் வந்து தமது பெண்ணை அழைத்துக்கொண்டு போவார்கள், அப் படி தாங்கள் எழுதாதபக்ஷத்தில் நான் இப்பெண்ணைக்கொண்டுபோய் தாய்தந் தையரிடம் ஒப்பிவித்துவிட்டுவந்த பிறகுதான் தங்கள் குமார்த்தியை விவாகம் செய்துக்கொள்வேனென்றான். அதைக்கேட்ட அரசன் அவன் சொன்னவித மாகவே எழுதுவதாய் சம்மதித்து மந்திரியை யழைத்து ஐம்பத்தாறு தேசத்தா சர்கட்கும் மணவோலை யெழுதியனுப்பும்படி ஆக்யாபித்தான்.

அதன்பிறகு மந்திரி சகல தேசத்தரசர்கட்கும் மணவோலையெழுதியனுப் பிவிட்டு நகரை அலங்காரம் செய்யும்படி ஆக்யாபிக்க அவ்விதமே செய்தபிறகு கலியாணமண்டபம் ஜோடித்து அந்தந்த தேசத்தரசர்கட்குத் தக்க இடமேற் படுத்தி விவாகத்திற்கு வேண்டிய சாமான்களனைத்தும் சித்தப்படுத்தி வைத்தி ருந்தன. மறுநாள் சகலதேசத்தரசர்களும் வந்து சேர்ந்தனர், கனகாபுரிக்கிறைவ னாகிய காமேந்திர மகாராஜன் சிவகாந்தபுரம் வந்து சேர்ந்து சூரனையழைத்து ஐயா எனது குமாரத்தி செண்பகவல்லி எங்ஙனமிருக்கின்றனள் எனக்கேட்க சூரன் அந்தப்புறத்திலிருக்கும் செண்பகவல்லியை யழைப்பித்து பெண்ணே உனது தந்தை வந்திருக்கின்றார் பார்த்தாயாவென செண்பகவல்லி தந்தையின் பாதத்தில் வீழ்ந்து ஓவெனக் கதறியழுகலுற்றனள். உடனே காமேந்திரன் தன் குமார்த்தியையெடுத்து கண்ணைத்துடைத்து முத்தமிட்டு குமார்த்தியைப் பார் த்து கண்மணி நீ இதுவரையில் எம்மைவிட்டு எவ்விதமாய்ப் பிரிந்திருந்தனை அந்த அரக்கன் உன்னை எடுத்துக்கொண்டுபோகும்போது ஏதாகிலும் துன்பம் விளைத்தனனாவெனக்கேட்க செண்பகவல்லி எல்லாவற்றையும் ஆதியோடந்த மாய் சொல்லிமுடித்து தான் அந்தப்புறஞ்சென்றனள். பிறகு காமேந்திரன் சூரனைப்பார்த்து ஐயா தாங்கள் எனக்குச்செய்த உபகாரத்திற்கு பிரதியுபகாரம் யானென்ன செய்யப்போகின்றேன், ஆகையால் தாங்களே இப்பெண்ணை

விவாகஞ்செய்துகொண்டு என்னுடைய இராஜ்ஜியத்தைப் பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கவேண்டுமென்றனன், அதைக்கேட்ட சூரன் ஐயா யான் அப்பெண்ணை எனது குமார்த்தியைப்போல் நாள்துவரையில் பாவித்திருக்கின்றேனேயொழிய விவாகம் செய்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தினால் கொண்டுவரவில்லை ஆகையால் தாங்கள் இன்றையதினம் என்னுடைய கலியாணத்திற்கிருந்து தாங்கள் போகும்பொழுது தங்களுடைய குமார்த்தியையும் கூடவே அழைத்துக்கொண்டு போய் அப்பெண்ணுக்குகந்த மணாளனுக்குவிவாகம் செய்வித்து சுசமாய் வாழ்ந்திருங்களென்றான் அரசனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்திருந்தனன்.

அதன்பிறகு! அசாசூரனை அரண்மனைக்குள் அழைததுச்சென்று ஸ்நானபான நேமநிஷ்டை யாவும் முடிப்பிக்கச்செய்து பொன்மயமான பட்டாடைகளுடுத்தி அலங்காரஞ்செய்து சிவசுந்தரிக்கும் அவ்விதமே அலங்காரஞ்செய்து திருமணப்பந்தலில் மாப்பிள்ளையையும் பெண்ணையும் உட்காரவைத்து சடங்கு முதலிய யாவையும் செய்து திருமங்கல்யதாரணம் செய்தான பிறகு பெண்ணையும் பிள்ளையையும் எழுப்பி விடுதியறையில் விடுத்து போஜனம் முதலியயாவும் உண்பிக்கச்செய்து வந்திருந்த இராஜர்களுக்கெல்லாம் விருந்து முதலியவை குறைவின்றி நடந்தேறியது, பிறகு இராஜர்களெல்லர்ம் அவரவரிருப்பிடமேகினர். காமேந்திர மகாராஜனும் தன் புத்திரியாகிய செண்பகவல்லியை யழைத்துக்கொண்டு சூரனிடம் விடைபெற்று தமது இராஜ்ஜியம் போய் சேர்ந்தனர். பிறகு சூரனும் சிவசுந்தரியும் தாம்பூலந்தரித்து சரச சல்லாபமாயிருந்தனர். மூன்றுநாளிரவு ஓர் அறையை சிங்காரித்து பிராமணர்களால் புத்திரசந்தான முண்டாகவேண்டுமென்று ஆசிகூறி அவ்வறையில் விடுத்தனர், இருவரும் அவ்வறைக்குட்சென்று இரதியும் மன்மதனும்போல கூடி சுகித்து வாழ்ந்திருக்கு நாளில் தன்னுடைய மாமனார் விர்த்தாப்பிய திசையடைந்து காலஞ்சென்றனர். பிறகு அசாசூரன் தன் மாமனாருடைய ராஜ்ஜியத்தைப் பரிபாலனஞ் செய்துகொண்டு சிவசுந்தரியுடன் சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.

ஆருக்கும் அஞ்சாத அசாசூரன் கதை

சம்பூர்ணம்.

இரண்டாவது சூரனாகிய

வீரகேசரியின் கதை.

சீருலாவிய பாதகண்டத்துட் சிறப்பெய்திய மாநகரெனும்சந்திரபுரியைப் பரிபாலனஞ்செய்யும் சந்திரகாந்தமகாராஜரென்பவர் மந்திரி பிரதானியருடன் சிம்மாதனத்தமர்ந்து துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனனென் றவனியோர்புகழ்ந் துரைப்ப குடிகள்மீது கருணைவாய்ந்து ஆறிலோர் கடமையேற்று சந்த்ரபுரியில் ஆதுலரில்லையெனப் பூதலம் புகழ்ந்துரைப்பத் தனது ஆளுகைக்குட்பட்ட சிற்றரசர் திறைசெலுத்த தீர வீர ப்ரகாசமாய் மனுமுறை வழுவின்றி சந்த்ரபுரியை அமராபுரியென் றறிஞர்களாற் புகழ்ந்துரைக்கும்படியாய் அரசுரிமை புரிவதாயினன். அன்றியும் தனது பத்தினியாகிய சத்தியவதனி இல்லற மார்க்கத்திற் சிறந்தவளாய்க் கருணை சாந்தம், அடக்கம், பொருமை, தெய்வபக்தி முதலாகிய நற்குணமமைந்து கீர்த்திப்ரகாசமாய் வாழ்ந்துகொண்டிருக்கையில் தன் சந்ததி பெருக மைந்தனின்றிய மனக்கவலையால் மெலிந்திருப்பதை யுணர்ந்த அமைச்சர்கள் அரசே தாங்கள் மனோவியாகூலத்துடனிருக்கும் காரணம் யாதென அரசன் கூறுவதாயினன். மந்திரி மகவின்றிய மனை மயானமன்றோ வென கற்றுணர்ந்த கவிஞர்களாற் புகலரும் நீதிசாஸ்திரங்கள் பலவற்றை யுணர்ந்த யான் இத்தகைய மலடென மாநிலத்திருப்பினும்மரணமெய்துவதே சிலாக்கியமெனவும் என் தந்தையின் இராஜரீகம் யான் புரிந்து அரசுரிமை புரிவது போல எனக்குப்பின்னால் யாவந் இந்நகரினைப் புரப்பாரென்க மனந்திகைப்பதாயினேன். இததகைய மனவிசாரமெய்துமெனக்கு யாது மனக்களிப்பெய்துமென மொழிந்தவையனைத்தும் வினவிய மந்திரியானவன் சற்று யோசித்து அரசே ஆவதும் அழிவதும் ஆண்டவன் செயலன்றி மனச்செயலென மதிப்பது சரியல்ல ஆகையால் தாங்கள் மனைவியுடன் கானகஞ்சென்று அருந்தபம் புரிவீராகில் சாக்ஷாத் ஜெகதீஸ்வரன் கிருபைகூர்ந்து புத்திரசந்தான மளிப்பாரென அதைக்கேட்ட அரசன் நன்கெனச் சம்மதித்து தன் மனைவியுடன் கானகஞ்சென்று தவம்புரிகையில் பரமசிவன் இவருடைய தவத்திற்குப் புகழ்ந்து ரிஷபவாகனருடராய் பிரசன்னமாகி அரசே உமக்கு புத்திரசந்தான வரமளித்திருக்கின்றோம் ஓர் ஆண்குழந்தை பிறக்கும். இனி நீங்கள் சுகமாய் இராஜ்ஜியத்திற்குப் போவீர்களென்று சொல்ல இராஜனும் பத்தினியும் சாஷ்டாங்கமாய் அவர் திருவடியில் வீழ்ந்து பணிந்து கரங்குவித்து நின்றனர். உடனே சாக்ஷாத் பரமசிவம் மறைந்தருளினர், அரசனும் தனது பத்தினியும்இராஜியத்திற்கு வந்து அரசன் மந்திரிபிரதானியரிடம் தன்னுடைய சுப சமாசாரத்தைத் தெரிவித்து எல்லோரும் ஆனந்தக்கடலில் மூழ்கியிருந்தனர்.

இங்ஙனம் நிற்க, சத்தியவதனி கர்ப்பவதியாகி தசமதியும் நிறைந்து ஓர் சுபதினத்தில் பூரணமதியம் பூதலம் வந்தெய்தியதுபோல்ப்ரகாச தேஜசமைந்த ஓர் ஆண்மகவை யீன்றனள். அத்தருணம் அருகிலிருந்த தாதிகள் ஓடோடியும் வந்து மைந்தன் பிறந்த சுப செய்தியை அரசனுக்குரைத்தனர். அதைக்கேட்ட அரசன் மிகவும் மனக்களிப்படைந்து தாதிகளுக்கு வேண்டிய ஆடையாபரணாதிகளை வெகுமதியாகத் தந்தனுப்பிவிட்டு அருகிலிருந்த மந்திரியினால் ஜோதிடகணிதவல்லோனை வரவழைத்து மைந்தன் ஜாதகங்கணிப்பாயென் றாக்ஞாபித்தனர். மன்னன் வார்த்தைக்கிணங்கிய சோதிடரும் அவ்விதமே நன்கெனச்சம்மதித்து குழந்தையின் இராசி லக்கின பலன்களனைத்தும் கவனித்து வீரகேசரியென நாமகரணஞ்சூட்டி அரசே உமது குழந்தையின் பலாபலன் எவ்வாறுளதெனின் பனிரெண்டுவயதிற்கு மேற்பட்டு இவன் வெகு பராக்கிரமமுடையவனாயிருந்து கானகவாசியாயலைந்து சில துயருற்று பிறகு பதின்மூன்றாவது வயதில் இவன் ஓர் மகானுடைய அருளால் குளிகையொன்று பெற்றுக்கொண்டு இவனைப்போற் சூரன் உலகிலில்லையென யாவரும் புகழ்ந்துரைக்குந்தன்மையாய் கீர்த்திவாய்ந்து ஓர் இராஜபுத்திரியை மணம்புரிந்து சுகமாய் தங்களுடைய இராஜ்யம் வந்து சேருவானென்றனன். இதைக்கேட்ட அரசன் நாம் இதுவரையில் தவமிருந்து பெற்ற இப்பிள்ளைக்கு இப்பேர்ப்பட்ட ஆபத்துகள் நேரிடும்படியாயிருக்கின்றதேயென்று சற்று துக்கித்து மறுபடியும் நமது பிள்ளை சுகமாய் வந்து சேருவானென்றிருப்பதைப்பற்றி சந்தோஷித்து சோதிடருக்கு வேண்டிய வெகுமதிகளைத் தந்தனுப்பிவிட்டனர்.

இங்ஙனம் நிற்க சத்தியவதனி தன் குழந்தைக்கு பாலூட்டிசீராட்டிநாளுக்குநாள் வெகு மேன்மையாக வளர்த்துக்கொண்டு வருகையில் வீரசேனன் கவிழ்ந்து தவழ்ந்து நடந்து நாளுக்குநாள் வளர்ந்து மதலைச்சொற்கள் பாஷித்து சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்ணுற்ற சத்தியவதனி தன் நாயகனைப் பார்த்து நாதா நமது புத்திரனுக்கு ஐந்து வயதாய்விட்டபடியால் வித்தியாரம்பம் செய்விக்கவேண்டுமென அரசனும் நன்கெனச் சம்மதித்து ஓர் சுபதினத்தில் ஆசிரியரிடம் அழைத்துக்கொண்டுபோய் வித்தியாரம்பஞ் செய்வித்தனர். அப்பால் வீரகேசரி நாள்தோறும் வித்தியாசாலைக்குச்சென்று ஆசிரியர் உபதேசித்தவிதமே நான்கு வேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்தினான்கு கலைக்கியானம் தொண்ணூற்றாறு தத்துவம் முதலாகிய மனுதர்ம சாஸதிர நூற்களனைத்துங் கற்றுணர்ந்து இராஜாங்கத்திற்கியன்ற ஆனையேற்றம், குதிரையேற்றமும், வேழமீதமர்ந்து வெஞ்சமர்புரிவதும், அஸ்வமீதமர்ந்து அருஞ்சமர்புரிவதும் வில்லிற்கணைதொடுத்து வீரர்களைப் புறமுதுகிட்டோட ஜெயிக்கும் சமர்த்தனாகி வையகத்தோர் புகலரும் வீர சூர ஜெய ப்ரதாப விஜயகேசரியை நிகர்த்த சமர்த்தனாய் விளங்குந்தருணம் ஓர்நாள் தன் தந்தையைப்பணிந்து எந்தாய்! யான் கற்றுணர்ந்த வில்வித்தையைப் பரீக்ஷிப்பதற்காக கானகமணுகி

விலங்கினவேட்டை யாடுவதற்கு ஆவலுற்றேன் கருணைகூர்ந்து விடையருள்வீரென்க அரசன் மைந்தன் சமர்த்தைக்கண்ணுற்று மனமகிழ்ந்தவனாயினும். "துணையோடல்லது நெடுவழி யேகேல்" என்னும் மூதோர் வாக்கியப்படியே தனியேசெல்வ தடாதவழுவென மதித்து தனது மைந்தனுடன் சில சேனாவீரர்களையனுப்பி மைந்தனுக்குத்தக்க புத்திகளைப்புகட்டி யனுப்பினன். பிறகு அனைவரும் வனத்திற் பிரவேசித்தவுடனே வேடவில்லியர் அஸ்திரங்களைப் பிரயோகித்து மிருகங்களைத்தும் நாற்புறமுஞ் சிதறியோடும்படியாய் கலைத்து ஆர்பாட்டஞ் செய்தனர். அத்தருணம் சிங்கம், புலி, சிறுத்தை கரடி, ஏனம், கடம்பை, மான், முள்ளம்பன்றி, முதலான விலங்கினமெல்லாம் வீறிட்டோடுகையில் சேனாவீரரனைவரும் முனைந்து வில், வேல், வாள், சத்தி, கேடயம், ஈட்டி, வல்லயம், வளைதடி, தோமரம், பிண்டி, பாலா, பரிசை, கத்தி, சட்டாரி முதலான பற்பல ஆயுதங்களினாலும் கானக விலங்கினங்களைக் கண்டதுண்டஞ்செய்து வேடிக்கைவிநோதமாய் வேட்டையாடிக்கொண்டிருக்கையில். ஓர் புள்ளிமான் சேனாவீரர்களையும் ஏமாற்றி அஸ்திரசஸ்திரங்கட்கும் தப்பித்துக்கொண்டு ஓடுவதைக் கண்ணுற்ற இராஜகுமாரனாகிய வீரகேசரி வியப்புற்று இந்த மானை விடலாகாதென காற்றைநிகர்த்த வேகத்தன்மையுடைய வெண்புரவியின்மீது ஆரோகணித்து கரத்தில் தனுசையேந்தி மானைத்தொடர்ந்து கானகமார்க்கமாய்ச் செல்வதாயினன்.

இங்ஙனம் நிற்க, கானின் மானானது கண்ணிமை கொட்டுமுன் காதவழி தூரமாய்ப் பாய்ந்தோடிப்போகவே வீரகேசரி மதிமயங்கி முகம் வியர்த்து, அன்னக்களையால் மயக்கமுற்றிருக்கையில் அஸ்வமானது அகஸ்மாத்தாய்மனித சஞ்சாரமின்றிய ஓர் இருண்ட கானகத்தில் வந்து நடப்பதற்குச் சக்தியற்று அசைவற்று நின்றுவிட்டது. அத்தருணம் வீரகேசரிமனந்திகைத்து இஃதென்ன ஆச்சர்யமென மெல்லென இறங்கி நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்து தான் வந்த வழி இன்னதென்றுங் கவனித்துணராமல் மனம்பதைத்து விசனசாகரத்திலாழ்ந்தவனாய் மனவியாகூலமுற்று தன் தாய்தந்தையரையும் தன்னுடன்கூட வந்த நேயர்களையும் தனக்கு வந்த அநியாய ஆபத்தையும் நினைந்து நினைந்து ஐயையோ விதிவசமே எனக்கு இவ்வனந்தானோ, மனையாய்விட்டதென்று மனவிசாரத்துடன் ஓர் ஆலவிருக்ஷத்தின் நீழலில் அம்மாவென் றலறிவீழ்ந்துமரணமூர்ச்சையாயினன். அவன் ஆரோகணித்துவந்த அஸ்வமானது ஓடிவந்த களைதெளிய மண்ணில் வீழ்ந்து புரண்டெழுந்து அங்ஙனமிருக்கும் பசுமையான புல்லை மேய்ந்துகொண்டு வழிதெரியாமல் கானகமார்க்கமாய்ப் போய்விட்டது. அச்சமயம் காற்றும் மழையும் இடிமின்னலோடு நெறநெறவென பொழிந்தமையால் ஆலவிருக்ஷத்தின்கீழ் சயனித்திருந்த வீரகேசரி களைதெளிந்து கண்விழித்துப்பார்த்து மழைபொழிவதையும் அஸ்வம் காணமற்போனதையுங்கண்ணுற்று மேன்மேலும் துக்கமதிகரித்து அந்தக் கானகத்தில் ஓடிச்சென்று அங்ஙனம்

விருக்ஷங்களடர்ந்து செழிப்புற்றிருக்கும் சோலையில் ஓர் வசந்தமண்டபம் தோற்றக்கண்ணுற்று அங்ஙனஞ்சென்றிருந்து பசிவேளைக்குக் கனிவர்க்கங்களைப் பறித்துப் புசிப்பதும் மற்ற வேளையில் அந்த வசந்தமண்டபத்திற்றானே தன் விதியை நினைந்து மனவிசாரத்துட னிருந்தனன்.

இங்ஙனம் வீரகேசரியின் நிலை ஆற்றொணா ஆபத்தாயிருக்கையில் இவனுடன் வேட்டையாடுவதற்கு வந்திருந்த சேனாவீரர்கள் மானைத்தொடர்ந்துபோன வீரகேசரி வெகுநேரம்வரையிலும் வரக்காணாமையால் மதிமயங்கி இஃதென்ன ஆச்சர்யமென்று ஒருவர்முகத்தையொருவர் பார்த்துக்கொண்டு இராஜகுமாரனை வனமிருகங்களேதேனும் கொன்றுதின்றுவிட்டதோவென கலவரத்துடன் வனமெங்ஙனும் அலைந்து தேடினுங் காணாமையால் மனவிசாரமடைந்து இனி அரசனுக்கு யாது புகல்வோமென மனந்திகைத்து யாவரும் ஆரண்யத்தை விடுத்து அரண்மனைக்குச் செல்வதாயினர்.

இங்ஙனம் இவர்கள் நிலை கலவரமாயிருக்கையில் சந்த்ரகாந்தனும் சத்தியவசனியும் தமது புத்திரனாகிய வீரகேசரி வேட்டையாட வனத்திற்சென்றவன் ஐந்து தினம் வரையிலும் வரக்காணிலமே கானகத்திலேதேனும் ஆபத்துற்றதோவென, திகிலுற்றிருக்கையில் வேட்டைக்குச்சென்ற சேனாவீரர்கள் அரண்மனையில் வந்து மந்திரி பிரதானியருடன் சிம்மாசனத்திலமர்ந்து இராஜரீகம் புரியும் சந்த்ரகாந்தனைப் பணிந்து யாதெனப் புகலுதுமென மெய்நடுங்கி வாய்குளறி பேசுதற்கும் நாவெழாமல் திப்ரமையுற்று கண்ணீர்ததும்ப மனவிசாரத்துடன் தலைகுனிந்திருந்தனர். இவர்கள் மனக்குறிப்பை இன்னதென்றுங் கவனித்துணராத அரசன் திடுக்கிட்டு தன் மைந்தனுக்கு யாதோ ஆபத்துற்றதென மனம்பதறி அவர்களை நோக்கி உங்களுடன் வந்த என் மைந்தனைப் பிரிந்துவந்த காரணம் யாதோ உண்மையைப் புகல்வீரென்க, சேனாவீரர்கள் மனமிரண்டு அரசே யாங்களனைவரும் உமது புத்திருடன் காட்டில் வேட்டையாடிக்கொண்டிருக்கையில் உமது புத்திரன் ஓர் மானைத் துரத்திக்கொண்டு போயினர். மறுபடியும் திரும்பிவரக்காண்கிலோம். யாங்களனைவரும் கானகமெங்ஙனுந் தேடிப்பார்த்தும் அகப்படவில்லை. இனி இவ்விபரீதத்திற்கு யாது செய்வோமெனப் புகன்றனர். இதைக்கேள்வியுற்ற அரசன் திடுக்கிட்டு ஆ! மைந்தா மைந்தாவென மண்மீது வீழ்ந்து மரணமூர்ச்சையாயினன். அப்பொழுது அருகிலிருந்த மந்திரி பிரதானியரனைவரும் அரசனைத்தேற்றி இராஜேஸ்வரா "மன்னர்க்கழகு மனந்தளராமை" என்னும் நீதிவாக்கியத்தை யனுசரித்துலகிலுய்வதன்றோ? செங்கோற்கியல்பு. இஃதன்றி மைந்தனைப் பிரிந்தோமென்று மனக்கவலையடைவது நன்கல்ல. யாதாமொருவரும் ஊழ்வினைப்பயனைத் தடுப்பதரிது. அன்றியும், நின் மைந்தனுடைய ஜாதகபலாபலன்களைத் தாம் கவனித்துணர்ந்த நீவிர் யாதுந் தெரியாதவர்போற் [illegible]ப்பது நன்கல்ல. உமது புத்திரன் தற்சமயம் யாதேனும் கிஞ்சிற்று துயருற்றாலும் பின்னர் மாகி

லம்புறக்கும் மகிபனுவனென்பதற்குத் தடையில்லை. ஆகையால் தாங்கள்சஞ்சலமுறுதல் கூடாதென தைரியம்புகன்று அரசனுடைய சஞ்சலத்தை நீக்கினர்.

இங்ஙனம் நிற்க வீரகேசரி இருண்ட கானகத்தில் ஓரிரவெல்லாமிருந்து மறுநாட்காலையில் ஆரண்யத்தைவிட்டுப் புறப்பட்டு தன் கால வித்தியாசத்தை நினைந்து நினைந்து புலம்பிக்கொண்டு வருகையில் கொஞ்ச தூரத்தில் ஓர் குடிசையைக் கண்ணுற்று அவ்விடம் விரைவாக வந்து குடிசைக்கருகாமையில் ஓர் மரத்தின் நீழலில் உட்கார்ந்தனன். அக்குடிசையிலுள்ள ஓர் கிழவி வீரகேசரியைக்கண்டு அப்பா இராஜகுமாரா நீ யாது காரணமாக வாடிய முகத்துடன் இவ்விடம் வருகலாயினை என விசாரித்தனள். வீரகேசரி தனக்கு வந்த ஆபத்தனைத்தும் ஆதியோடந்தமாய் கிழவியிடம் புகன்று அம்மா எனக்கு மெத்தப் பசியாயிருக்கின்றது ஆகையால் தாங்கள் புசிக்கும் ஆகாரவஸ்துக்களில் எதாகிலும் கொண்டுவந்து கொடுக்கவேண்டுமென கேட்க கிழவி உடனே வீரகேசரியை தன தில்லத்திற் கழைத்துக்கொண்டுபோய் அன்னமளித்து வீரகேசரி சாப்பிட்டபிறகு கிழவி சொல்வதாயினள். அப்பா இராஜகுமாரா யான்சொல்வதைச் சற்று கவனமாய்க் கேட்பாயாக இவ்வூருக்கருகில் அதோ தெரிகின்றமலையின் வழியாகத்தான் உன்னுடைய தேசத்திற்குச் செல்லவேண்டும் அந்த மலையின்பேரில் நாற்பது திருடர்கள் வாசஞ்செய்துகொண்டு தாங்கள் திருடிக்கொண்டுவரும் திரவியங்களையெல்லாம் அம்மலையின்கீழ் ஓர் பெரிய குகையில் வைத்துக்கொண்டு யாவருக்குந்தெரியாமல் வாசஞ்செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் அவ்வழியாய் யாவரேனும் செல்வாராகில் உடனே அவர்களைக் கண்டதுண்டமாக்கிவிடுவார்கள். இஃதிங்ஙனமிருக்க நீ இன்னும் இரண்டுநாள் இவ்விடமிருப்பின் உன்னுடைய ராஜ்ஜியத்திற்கு சுகமாய்ப் போய் சேரும்படி செய்கிறேன். இதுவரையில் நீ வெளியே வராமல் குடிசைக்குள்ளே பத்திரமாயிருக்கவேண்டும் என்றனள். வீரகேசரி அவ்விதமே நன்கெனச் சம்மதித்து கிழவியினால் நமக்கு நற்காலம் வந்தெய்தியதென மனமகிழ்ந்து குடிசைக்குள்ளிருந்தனன்.

இஃதிங்ஙனமிருக்க அவ்வூர் அரசனுடைய மாளிகையில் மேற்சொல்லிய நாற்பது திருடர்களும் நுழைந்து அரண்மனையிலுள்ள திரவியமனைத்தும் திருடிக்கொண்டுவந்துவிட்டனர். மறுநாள் அரசன் இந்த திருடர்களைக் கண்டுபிடிக்கும்படி சேனாவீரர்களையும் மற்றுமுண்டான சேவகர்களையும் நாற்றிசையிலும் அனுப்பிவைத்தனர். அவர்கள் எங்கெங்கும் தேடி அவர்களைக்காணாது வந்து அரசனிடம் தெரிவித்தனர். மறுநாள் இரவும் அம்மாதிரியே கள்வர்கள் அரண்மனையில் வந்து திருடிக்கொண்டு போய்விட்டனர். பிறகு அரசன் அரண்மனையிலுள்ள பொருளையெல்லாம் பறிகொடுத்துவிட்டோமே நாம் நகரினைப் பரிபாலிக்கும் அரசனாயிருந்தும் நம்முடைய சேவகர்களாலும் சேனாவீரர்களாலும்

அத்திருடரைக் கண்டுபிடிக்க முடியவில்லையேயென்று மனவிசாரமுற்று தன் மந்திரியையழைத்து நமது அரண்மனையில் இரண்டு தினங்களாய் திருடிக் கொண்டு போகும் கள்வர்களைக் கண்டுபிடித்து நம்மிடம் கொண்டுவரும்படி யான சூரனுக்கு நமது பெண்ணை விவாகம் செய்துகொடுப்பதாய் தண்டோரா மூலமாய் நகரமுழுதும் தெரிவிப்பாயென் றுக்யாபித்தனர். மந்திரியும் அவ்வி தமே தலையாரியையலைழத்து நகரமுழுதும் தண்டோரா போடுவித்தனர். இங்ஙனம் இவர்கள் நிலை சந்தேக கலவரமாயிருக்கையில் மேற்சொல்லிய கிழவியின் குடிசையில் வந்திருந்த வீரகேசரி கிழவியைப்பார்த்து அம்மா தாங்கள் கூறிய வண்ணமே இரண்டு நாளாய்விட்டது, இனி எனது இராஜ்ஜியத்திற்குப் போக விடைகொடுக்கவேண்டுமென கிழவி வீரகேசரியைப்பார்த்து அப்பா இன்றையதினம் இம்மலையிலுள்ள திருடர்களெல்லாம் வேறு நகரத்திற்குப் போயிருக்கிறார்கள் ஆகையால் யானுனக்கு கட்டுசாதம் கட்டிக்கொடுக்கின் றேன் அதையெடுத்துக்கொண்டு திருடர்கள் வருவதற்குள் அம்மலையைத் தாண்டிப்போய்விடுவாயானல் பிறகு உனக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. சுகமாய் உனது நகரம் போய் சேருவாயென்று விடைகொடுத்தனுப்பினள், பிறகு வீரகேசரி கிழவியிடம் விடைபெற்று அம்மலையின்மேல் வரும்போது மேற்சொல்லிய திருடர்கள் வேறு நகரஞ்சென்று திருடின திரவியங்களையெல் லாம் குதிரையின்பேரிலும் கழுதையின்பேரிலும் ஏற்றிக்கொண்டு மலைக்கு கொஞ்ச தூரத்தில் வருவதைக் கண்ணுற்ற வீரகேசரி திகிலடைந்து ஆ! ஜெகதீசா நமக்கு இதுவரையிலும் நேர்ந்த ஆபத்தைக்காட்டிலும் இது மேலான ஆபத்தாயிருக்கின்றதே நமது பிராணன் இன்றையதினம் கட்டாயம் போய் விடும்போலிருக்கின்றனவே இனி எவ்விதம் நமது பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளப்போகின்றோமென்று நாற்புறமும் திரும்பிப்பார்த்து ஓடிப்போகலா மென்றாலும் வேறு வழியில்லையே திருடர்களும் சமீபத்தில் வந்துவிட்டார் களேயென்று திகைத்து அம்மலையின்பேரிலுள்ள ஓர் விருக்ஷத்தின்மீது ஏறி ஒளிந்துகொண்டான் பிறகு திருடர்களனைவரும் இவன் ஒளிந்திருக்கும்படி யான மரத்தண்டை வந்து தாங்கள் ஏறிவந்த குதிரைகளை அம்மரத்தில் கட்டி விட்டு தாங்கள் கொண்டுவந்த பொருளை யெடுத்துக்கொண்டு அம்மரத்தின் கீழுள்ள குகையினருகில் வந்து சேசம் கதவை திறந்துகொள்ளென்றார்கள் அப் பொழுது கதவு திறக்கப்பட்டது. உடனே நாற்பது திருடரும் உள் நுழைந்து தாங்கள் கொண்டுவந்த திரவியமனைத்தும் குகையில் வைத்துவிட்டு அனைவரும் போஜனம் முதலியனவும் அக்குகையிலேயே செய்து புசித்துவிட்டுதமது வழக் கம்போல் திருடுவதற்காக யாவரும் வெளியில் வந்து ஓ சேசம் கதவை மூடிக் கொள்ளென்றார்கள். அப்படியே கதவு மூடிக்கொண்டது பிறகு அனைவரும் ஆயுதபாணிகளாய் தங்கள் தங்கள் குதிரையின்பேரிலேறிக்கொண்டு வேறு நக ரத்திற்குப் போய்விட்டார்கள்.

பிறகு வீரகேசரி மரத்தின்மீதிருந்தபடியே திருடர்கள் வந்ததையும் கதவு திறக்கவும மறுபடியும் மூடிக்கொள்ளும்படியான மந்திரம் சொன்னதையும் கேட்டுக்கொண்டிருந்து அவர்கள் போய்விட்ட பிறகு மரத்தைவிட்டு கீழிறங்கி திருடர்கள் சொன்னதுபோலவே தானும் சேம் கதவைத் திறந்துகொள் ளென்றான் உடனே கதவு திறந்துகொள்ள அக்குகையினுள் சென்று அவ்விடத்தில் இருக்கும்படியான அதிசயங்களையும் அளவற்ற இராஜாக்களின் அரண்மனைகளிலிருந்து திருடிக்கொண்டு வந்திருக்கும் திரவியங்களையும் கண்டு பெருமூச்செறிந்து இப்பேர்ப்பட்ட திரவியங்களை நாம் எங்கினும் கண்டதில்லையே யென்று ஆச்சர்யமுற்று இன்னும் அக்குகையிலுண்டாகிய பலவிதமான அதிசயங்களையெல்லாம் பார்த்துவிட்டு இதிலுள்ள திரவியங்களை யெடுத்துக்கொண்டுபோகலாமென்றால் இப்பொழுது சாத்தியப்படாது ஆகையால் நமது நகரத்திற்குச்சென்று யானை, குதிரை, ஒட்டை முதலியவைகளுடன் இவ்விடம் வந்து அவைகளின்பேரில் ஏற்றிக்கொண்டுபோகலாமென்று குகையைவிட்டு வெளியில்வந்து நீ சேம் கதவை மூடிக்கொள்ளென்று சொல்லிவிட்டு தனது நகரத்தை நாடி வருகையில் முன்னால் திருடரால் கொள்ளையடிக்கப்பட்டு அத்திருடரைப் பிடித்துக்கொடுப்பவர்க்கு தமது பெண்ணை விவாகம் செய்துவைக்கிறேனென்று தண்டோரா போடப்பட்டிருக்கும் தேசமாகிய மராட தேசத்து தலையாரிகள் வீரகேசரியைக்கண்டு ஐயா தாங்கள் வசிப்பது எங்கே? தங்களைக் காணின் இராஜகுமாரனைப்போறீரென்றுகிறதே தாங்கள் ரொம்பவும் சஞ்சலப்பட்ட மனத்தினராய் எங்ஙனம் செல்கின்றீரென்றனர், அதைக்கேட்ட வீரகேசரி ஐயா நான் ராஜகுமாரன்தான் எனது தாய்தந்தையரை விடுத்து யாத்திரை செய்யவெண்ணி அநேக தேசாந்திரங்களெல்லாம் திரிந்து அந்தந்த தேசங்களிலுள்ள அதிசயங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு இந்நகரத்திற்கு வருகலாயினேன். இவ்வூரில் ஏதேனும் விசேஷமுளதோ தெரிவிப்பீரென்றனன். அதைக்கேட்ட தலையாரிகள் ஐயா இவ்வூர் அரசனுடைய மாளிகையில் திருடர்கள் புகுந்து பொக்கிஷங்களையெல்லாம் கொள்ளையடித்துவிட்டுப்போய் விட்டனர், பிறகு அரசன் எங்களையும் இன்னும் அநேக சேனைவீரர்களையும் அனுப்பி அத்திருடரை கண்டுபிடிக்கும்படி கட்டளையிட்டார். அதன்படியே யாங்கள் எங்கிலும் தேடி அகப்படவில்லையென்று அரசனிடம் தெரிவித்தோம் பிறகு அரசன் அந்த திருடரைக் கண்டு பிடித்துக்கொண்டு வருபவர்கட்கு தம்முடைய பெண்ணை விவாகம் செய்துகொடுப்பதாக தண்டோரா போடும்படி உத்தரவுகொடுத்திருக்கிறார். இதுதான் இவ்வூரிலுள்ள விசேடமென்றனர். அதைக்கேட்ட வீரகேசரி தலையாரிகளைப்பார்த்து கூறுகிறான். ஐயா இதுதானு ஓர் பெரிய காரியம் நீங்கள் அரசன் சமுகம் என்னைக்கொண்டுபோய் விடுங்கள் நான் அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு அந்த திருடரை இக்ஷணமே பிடித்துக்கொண்டுவருகிறேனென்றான். அதைக்கேட்ட தலையாரிகள் அவனையழைத்

துக்கொண்டுஓடோடியும் வந்து அரசனிடம் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட அரசன் வீரகேசரியைப்பார்த்து அப்பா! திருடர்களைக்கண்டுபிடித்து இவ்விட மழைத்துக்கொண்டுவர உன்னால் முடியுமாவென வீரகேசரி அரசே தாங்கள் என்னுடன்கூட சில குதிரைகளை யனுப்பிவைத்தால் அவர்கள் திருடிக்கொண் டுபோன திரவியங்களையெல்லாம் முதலில் கொண்டுவந்துவிடுகிறேன். பிறகு அவர்கள் இவ்விடம் வருவார்கள் அப்பொழுது அனைவரையும் பிடித்துக் கொ டுக்கிறேனென்றான். அரசன் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து சில குதிரை களை யனுப்ப அவைகளை யழைத்துக்கொண்டு வீரகேசரி திருடரிருக்கும்படி யான குகையருகிற்சென்று குதிரைகளை மரத்தில் கட்டிவிட்டு முன் சொன்ன துபோலவே சேம் கதவைத்திறந்துகொள்ளென்றான் உடனே கதவு திறந்து கொள்ள அவன் குகையினுட்சென்று திரவியங்களையெல்லாம் பைகளில்நிறப்பி குதிரைகளின்மேலேற்றிக்கொண்டு குகையினின்றும் வெளிவந்து மந்திரத்தை சொல்லி கதவை மூடிக்கொண்டவுடன் குதிரைகளை நடத்திக்கொண்டு அரச னுடைய அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். இதைக்கண்ட அரசன் மந்திரிமுத லானோர் அளவற்ற சந்தோஷசாகரத்தில் மூழ்கி கொண்டுவந்த திரவியங்களை யெல்லாமிறக்கி வைத்துக்கொண்டு வீரகேசரிக்கு வேண்டிய உபசரணைசெய்து தன் மகளை விவாகம் செய்துகொள்ளும்படி வேண்டினர். வீரகேசரி திருடர்க ளைக் கண்டுபிடித்து அவர்களனைவரையும் கொன்றுவிட்டபிறகு யான் கலியா ணம் செய்துக்கொள்வேனென்று சொல்ல அனைவரும் சம்மதித்து திருடர்கள் என்றைக்கு அகப்படப்போகிறார்களோ வென்றிருந்தனர்.

இங்ஙனம் இவர்கள் நிலை இவ்விதமிருக்கையில் வெளியே சென்றிருந்த திருடர்கள் நாற்பதுபேரும் குகையினருகில் வந்து தமது குதிரைகளைவிட்டு இறங்கி மந்திரத்தைச்சொல்லி உள்சென்று பார்க்கையில் திரவியங்கள் ஒன்று மில்லாததுகண்டு ஆச்சரியப்பட்டவராய் இதுகாலமாய் எவர்கள் கண்களுக்கும் புலப்படாமல் மர்மரகசியமாயிருந்த நமது குகையின் ரகசியம் இன்றையதினம் வெளியாய்விட்டதே ஆ! ஆ! நாமே திருட்டுத்தொழில் புரிபவர் நம்மிடத்தி லேயே திருடவந்தவன் எப்பேர்ப்பட்ட சூரனோ? அவனை இக்ஷணமே நமது கைவாளினால் சிரசைப்பிளந்து எமபுரிக்கனுப்பிவிட்டு நமது திரவியத்தைக் கொண்டுவரவேண்டும் ஆகையால் அனைவரும் புறப்படுங்களென்று அத்திருட ரில் ஒருவன் சொல்ல அதைக்கேட்டு திருடர்கட்குத் தலைவனாயிருக்கப்பட்ட வன் சொல்லலுற்றான. ஏ சகோதரர்காள் நீங்கள் ஏன் வீணில் உளறுகிறீர்கள் இவ்விடம் வந்தவன் யாவன்? அவன் எவ்விட மிருப்பவனென்று உமக்குத்தெரி யுமா? நான் சொல்வதைக்கேளுங்கள். முன்பொரு காலத்தில் நாம் மராட தே சத்தரசன் வீட்டில் போய் திருடிவிட்டு வந்தோமே அவ்வரசன் நம்மைப்பிடித் துக்கொடுப்பவனுக்கு தமது பெண்ணைக் கலியாணம் செய்துகொடுப்பதாக தண்டோரா போட்டிருப்பதாய் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது இவ்

விடம் வந்தவன் அவ்வரசன் உத்திரவின்படி வந்தவன்போலத் தோற்றுகிறது. ஆகையால் நாம் இவ்விதமாய் திருடர்க்குறிய ஆயுதங்களுடன் செல்வோமாகில் கட்டாயம் அகப்பட்டுக்கொள்வதற்குத் தடையில்லை. இப்பொழுது நானோர் உபாயஞ்சொல்லுகிறேன் அதைப்போல் நீங்களும் நடந்தால் நமதெண்ணம் நிறைவேறுமென்றுசொல்லி அவர்களை நோக்கி பட்டணத்திற்கு வெளியிலிருக்கும் கிராமங்களுக்குச்சென்று பத்தொன்பது கோவேறு கழுதைகளும் முப்பத்தெட்டு தோற்பைகளும் சம்பாதித்துக்கொண்டு அதில் ஒரு பை நிறைய எண்ணெய் வார்த்துக்கொண்டு வாருங்களென்று உத்தரவுபுரிந்தான் அப்படியே அவர்கள் போய் அதுகளைக் கொண்டுவந்தவுடனே தோற்பைகளின் வாய் மிகவும் சிறியதுகளாகவிருந்தமையால் அதுகளைப் பெரிதாகச்செய்து ஒவ்வொன்றில் ஒவ்வொருவனை வேண்டிய ஆயுதங்களோடு வைத்து அவர்களுக்கு மூச்சு வரும்படி கட்டுகளை தளர்த்தி எண்ணெயிருக்கும் பையிலிருந்து கொஞ்சம் எண்ணெயெடுத்து மற்றதுகளின்பேரிற்பூசி சித்தப்படுத்தி இவ்விதமாக பத்தொன்பது கழுதையின்பேரில் முப்பத்தெட்டு திருடர்களுள்ள பைகளையும் எண்ணெ வார்த்திருக்கும் பையையும் எடுப்பித்து ஒருவனை குகைக்கு காவலாய் வைத்துவிட்டு அவர்கட்குத் தலைவன் இந்த கழுதைகளை யோட்டிக்கொண்டு வெளிப்பட்டு அஸ்தமானத்திற்குப் பட்டணம் சேர்ந்து இராஜன் அரண்மனையண்டை அதுகளை செலுத்திக் கொண்டுபோய் இராஜன் வீரகேசரியுடன் வெளியில் நின்றிருப்பதைக்கண்டு அங்கே கழுதைகளை நிறுத்தி இராஜனை நோக்கி ஐயா நாளையதினம் சந்தையில் விற்றுக்கொள்வதற்காக வெகுதூரத்திலிருந்து கொஞ்சம் எண்ணெய் கொண்டுவந்தேன். இப்போது பொழுதுபோய் விட்டபடியால் இராப்பொழுது தங்கியிருப்பதற்கு இடம் அகப்படுவது கஷ்டமாயிருக்கிறது. தாங்கள் தயவுசெய்து இராப்பொழுது கழிப்பதற்கு கொஞ்சம் இடங்கொடுப்பீராகில் மிகவும் உபகாரமாக விருக்குமென்றான் அரசனோடு கூட நின்றிருந்த வீரகேசரி திருடனை முன்னம் வனத்திற்பார்த்தும் அவனுடைய வார்த்தையைக் கேட்டும் இருந்தபோதிலும் அவன் இப்போது வாணிய வேடந்தரித்திருந்தமையால் தெரியாமற்போய்விட்டது. பிறகு அரசன் நல்லதென்று ஒப்புக்கொண்டு அப்போதே அரண்மனைக்குப் பின்புறத்திலுள்ள தோழத்தைத்திறந்து கோவேறு கழுதைகளை உள்ளே ஓட்டும்படி செய்து வேலைக்காரரையழைத்து அந்த பளுவுகளை இறங்கினவுடன் கழுதைகளுக்குக் கொள்ளுவைக்கும்படி உத்தரவு செய்து வாணியன் கொண்டுவந்திருக்கும் சரக்குகளினாலும் அவன் பேசும் மரியாதை வார்த்தைகளினாலும் இவன் வெகு நாணயமுடையவன் பெரிய வர்த்தகனுடைய பிள்ளையாயிருப்பானென்று அவன்மீது மிகுந்த பக்ஷமுடையவனாய்த் தமது சகோதரரைப்போல பாவித்து வேலைக்காரரையழைத்து வந்த வர்த்தகருக்கு போஜனமும் படுக்கையும் தயார் செய்யும்படி கட்டளையிட்டார். வர்த்தகனுக்கு சௌக்கியமாக விருக்கும்படி பின்னுஞ்செய்த

தென்னவெனில் வர்த்தகன் நாமெங்கே படுத்திருந்து நமது வேலைகளை முடிக்க லாமென்று இங்குமங்கும் திரிந்துகொண்டிருக்கையில் அரசன் வர்த்தகனை யழைத்து நீர் வெளியில் படுக்கவேண்டாம் என்னுடன்கூடவே படுத்துக்கொள் ளுங்களென்றான் அதற்கு வர்த்தகனாக வந்த திருடன் அரசனைப்பார்த்து தங்க ளுக்கு அதைப்பற்றி அதிக பிரயாசை வேண்டாம் நானெங்கேயாவதுபொழுது போக்குகிறேனென்றான். அரசனும் வீரகேசரியும் நல்லதென சம்மதித்து வர்த் தகனோடு சிலநேரம் வார்த்தையாடிக்கொண்டிருந்து போஜனம் சித்தமான வுடன் வர்த்தகனை எழுந்திருக்கச்செய்து போஜனசாலைக்கனுப்பி அவனுக்கு செவ்வையாய் விசாரிக்கச்செய்து பிறகு அரசனும் வீரகேசரியும் போஜன சாலைக்குட்சென்று அறுசுவைப்பதார்த்த திவ்யான்ன சுகபோஜனமருந்தி தாம் பூலமுதலானதும் தரித்து சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து பிறகு அரசன் வேலைக்காரரையழைத்து நாளைதினம் காலையில் வீரகேசரியும் யானும் ஸ்நா னஞ் செய்யவேண்டுமாகையால் உதயத்திற்கு முன்னே ஸ்நானஞ் செய்து விட்டுவந்தவுடன் குடிப்பதற்கு கொஞ்சம் சூப்பு தயார்செய்து வைக்கவேண்டு மென்று உத்தரவு செய்துவிட்டுப் போயினர். வர்த்தகனென்னும் திருடன் தன் மனிதரிடத்திற்குப்போய் ஒவ்வொரு பையினருகில் நின்று நான் படுத்தி ருக்கும் வீட்டிலிருந்து கல்லுகளைப் போடுகிறேன் உடனே நீங்கள்உங்களிடத் திலிருக்கும் கத்தியினால் பைகளைக் கிழித்துக்கொண்டு வெளியில் வருவீர்க ளாகில் அப்போது நானும் உங்களோடு கலந்துக்கொள்ளுகிறேனென்றுசொல் லிவிட்டுப் படுக்கைக்குப் போய்விட்டான். பிறகு வேலைக்காரர்கள் விடியற் காலையில் அரசனுக்கு சூப்பு வைக்கவேண்டுமேயென்று சூப்பு காய்ச்சுஞ் சட் டியைக் கொண்டுவந்து துலக்கிக்கொண்டிருக்கையில் தீபம் நின்றுவிட்டது. அச்சமயம் வீரகேசரி நித்திரைநீங்கி யெழுந்து வேலைக்காரர்கள் ஸ்நானஞ்செய் விக்க தயாராயிருக்கிறார்களாவென்று பார்க்கும்பொருட்டு அந்தப்புறம் வருகை யில் அங்கிருந்த வேலைக்காரர்கள் வீரகேசரியைப்பார்த்து கூறுகிறார்கள். ஐயா யாங்கள் சூப்புவைக்கும் சட்டியை துலக்கிக்கொண்டிருக்கும்போது தீபம் நின்றுவிட்டது. இப்போது வீட்டில் மெழுகுவத்தியாவது எண்ணெயாவது ஒன் றும் கிடையாது என்றனர். அதைக்கேட்ட வீரகேசரி இதோ யான் போய் தோழத்தில் வந்திறங்கியிருக்கும் எண்ணெய்ப்பைகளிலிருந்து கொஞ்சம் எண் ணெய் கொண்டுவருகிறேன் ஏதாவது ஒரு பாத்திரங்கொண்டுவாவென்றனன். அவ்விதமே வேலைக்காரி பாத்திரங்கொண்டுவந்துகொடுக்க அதை வாங்கிக் கொண்டு தோழத்திற்குட்சென்று முதற்பையினருகில் சென்றவுடன் அதற்குள் ளிருக்குந் திருடன் ஆரோ வருந் சந்தடியைக்கேட்டு தனது தலைவனென்று நினைத்து இது சமயந்தானோவென்று மெதுவாய்க்கேட்டான். அஃதெனெனில் திருடர்களின் தலைவன் கழுதைகளின்மேலிருந்த பைகளை இறக்கினவுடன் அதற்குள்ளிருப்பவர்களுக்கு சௌக்கியமுண்டாக்கும்பொருட்டு பைகளையெல்

லாம் நன்றாய்த் திறந்துவைத்தான்." அதனால் எண்ணெய்ப் பைகளுக்குள் மனிதர்களிருக்கும் சங்கதி வீரகேசரிக்கு தெரிந்துவிட்டது. இன்னும் வேறு புருடராயிருந்தால் திருடரைக்கண்டவுடன் பயந்து கூக்குரலிட்டு காரியத்தை கெடுத்துப்போடுவார்கள். வீரகேசரியோவெனில் மிகவும் தைரியசாலியும் புஜபல பராக்கிரமமுடையவனாகையால் திருடர்களின் குரலைக்கேட்டவுடனே தனக்கும் அரண்மனையிலுள்ளோர் அனைவருக்கும் நேர்ந்திருக்கும் அபாயம் இப்படிப்பட்டதென்றும் அதற்குத்தகுந்த யோசனையோடு அவர்களனைவருடைய உயிரை மாய்க்கும்படியான வகையைத் தேடவேண்டுமென்று நினைத்து இப்பேர்ப்பட்ட சங்கதியை இரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டியது அகத்தியமென நினைத்து மனதிடங்கொண்டு அந்த திருடன் இது சமயந்தானாவென்று கேட்டதற்கு உத்தரவாக இன்னுஞ்சமயமல்ல சற்றே பொறுவென்று அப்படியே ஒவ்வொரு பையினிடத்திற்குப்போய் அதுவே பிரகாரம் சொல்லி எண்ணெய் இருக்கும் பையினிடத்திற்குப் போனான். இம்மாதிரி வந்தவர்கள் முன்பு குகையண்டை கண்ட நாற்பது திருடர்களென்று கண்டுகொண்டு இந்தப்பையில் ஆருமில்லையென்பதையுமறிந்து சீக்கிரமாய்ப் பையிலிருந்தஎண்ணெயை வார்த்துக்கொண்டு சமயல்வீட்டிற்குப்போய் தீபமேற்றி வேலைக்காரியை யழைத்து அடுப்பில் பெரிய தேக்சா ஒன்றை வைத்து தான் கொண்டுவந்த எண்ணெயை அதில் வூற்றி காய்ச்சும்படி சொல்லிவிட்டு பெரிய பானையொன்றையெடுத்துக் கொண்டு போய் அதில் நிறைய எண்ணெய் வார்த்துக்கொண்டு வந்து அடுப்பின்மீதிருக்கும் தேக்சாவில் வூற்றி காய்ச்சும்படி உத்தரவுசெய்து எண்ணெய் நன்றாய் தளதளவென்று காய்ந்தவுடன் அப்படியே அந்த எண்ணெயை எடுத்துக்கொண்டுபோய் ஒவ்வொரு பைகளாக வார்த்துக்கொண்டே போனான். அதுகளிலிருந்த திருடர்கள் அப்படி அப்படியே கப்புகப்பென்னாமல் வெள்ளறிப்பழம்போல் விரிந்து நாசமடைந்தார்கள். வீரகேசரி தைரியத்தினால் இந்த வேலையைச் செய்துமுடித்து வெறுஞ்சட்டியையெடுத்துக்கொண்டு சமையல் வீட்டிற்குப்போய் வேலைக்காரியிடம் சொல்லி விளக்கை நிறுத்திவிட்டு இன்னுமென்ன நடக்கிறதோ பார்ப்போமென்று தோழத்தின் பக்கமாக யிருக்கும் ஓர் சாளரத்தின்வழியாய் பார்த்துக்கொண்டிருந்தான். பின்னும் அரைநாழிகைக்குள்ளாகவே திருடர்களின் தலைவன் நித்திரை தெளிந்தெழுந்து இருட்டாகவும் சந்தடியற்றிருப்பதையுங்கண்டு ஒரு சின்னக் கல்லையெடுத்துப்போட்டு சைகைசெய்தான். அப்படியே பின்னும் பின்னும் போட்டுசில கல்லுகள்தோற்பைகளின்மேல் விழுந்து தொட்டென்னும் ஓசை அவனுக்குக்கேட்டும் அவர்களுடைய அரவம் ஒன்றும் இவனுக்குக் கேளாதிருந்தமையால் இவன் கலவரப்பட்டு தைரியமிழந்து மிகவும் பயமடைந்து தோழத்திற்குள் மெதுவாய் போய் ஒரு பையினிடத்தில் கையைவைத்து அதிலிருக்கும் திருடன் பிழைத்திருக்கிறானென்று நினைத்து நித்திரை செய்கிறாயோவென்று கேட்கும்போது அதி

விருந்து சுடுநாற்றமும் பிணநாற்றமும் வந்ததுமன்றி மனிதனுடைய ஆவிநீங்கியிருப்பதைக்கண்டு ஓ! ஓ! மோசம் வந்ததென்று யோசித்து ஒவ்வொரு பையாகச்சோதித்து யாவரும் நாசமடைந்துபோனதையும் கடைசிப்பையில் எண்ணெயில்லாதிருப்பதையுங்கண்டு, அவர்கள் மரணமடைந்தவிதம் இன்னபடியென நிதானித்துணர்ந்துகொண்டு தனது லட்சியந் தப்பிப்போனதற்காக நிராசைகொண்டதுமன்றி தோழத்திலிருந்து தோட்டத்திற்குப் போகும்படியான புறக்கடைக்கதவினுடைய பூட்டை யுடைத்து உள்ளே போய் சுவரேறிக்குதித்து தான் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டான். போனவன் மறுபடி வராதிருப்பதைக்கண்டு வீரகேசரி அவன் தப்பித்துக்கொண்டோடிப்போய்விட்டானென்றுணர்ந்து தான் படுக்கைக்குப் போய்விட்டான். அரசன் விடியற்காலையிலெழுந்து வேலைக்காரரை யழைத்துக்கொண்டு ஸ்நானத்திற்குப் போய்விட்டாரேயொழிய வீட்டில் நடந்த சங்கதி அவருக்கு யாதொன்றுந் தெரியாது. சூரியோதயமானவுடன் அரசன் ஸ்நானஞ்செய்துவிட்டு தோழத்தில் வரும்போது எண்ணெய்ப்பைகளை அப்படியே போட்டுவிட்டு கோவேறுகழுதைகளையும் விட்டுவிட்டு வர்த்தகன் போய்விட்டதைப்பார்த்து ஆச்சர்யமுற்று இதென்னவென்று வீரகேசரியைக்கேட்டனர். வீரகேசரி அரசனைப்பார்த்து ஐயா யான் தங்கள் வீட்டில் முன்பு கொள்ளைபடித்துக்கொண்டுபோன திருடர்களைக் கண்டுபிடிக்கிறேனென்று சொல்லியிருந்தேனே அந்த நாற்பது திருடர்கள்தான் இவர்கள் தாங்கள் இப்போது என்னுடன்கூட வருவீர்களாகில் அவர்களைக் காண்பிக்கிறேனென்று அரசனை யழைத்துக்கொண்டுபோய் தோற்பைகளை யவிழ்த்துக் காட்டி இதில் எண்ணெய் எதாவது இருக்கிறதா பாருங்களென்றான். அப்படியே அரசன் பார்க்கும்பொழுது மனிதனிருப்பதைப்பார்த்து பயந்து கூச்சலிட ஆரம்பித்தார். வீரகேசரி அரசனை நோக்கி பயப்படாதீர். இதிலிருப்பவன் உம்மையாவது மற்ற யாரையாவது ஒன்றுஞ்செய்ய வறியான். இவன் செத்த பிணமென்றான். அதைகேட்ட அரசன் ஆ! செத்த பிணயா! என்ன சங்கதி என்னோடு சொல்லென்றார். அதைக்கேட்ட வீரகேசரி தாங்கள் அதற்காக ஆச்சர்யப்படவேண்டாம் அதனால் அக்கம்பக்கத்தார் தெரிந்துகொள்வார்கள் இந்த சங்கதியை மிகவும் இரகஸ்யமாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாதலால் மற்ற பைகளையும் பாருங்களென்றான். அரசன் ஒவ்வொரு பைகளாக பார்த்துவருகையில் முடிவில் எண்ணெய்ப் பையை பார்க்கும்போது அது கீழே விழுந்திருக்கக்கண்டு வீரகேசரியின் முகத்தையும் அந்தப் பையையும் பலதரம் பார்த்து ஒன்றுஞ் சொல்லமாட்டாதவராய் பிரமித்துநின்று சற்றுநேரம் ஊமையைப்போலிருந்து பின்பு வர்த்தகன் என்னமானானென்றார். அதைக்கேட்ட வீரகேசரி ஆ! வர்த்தகனா அவன் இப்பேர்ப்பட்டவனென்றும் அவன் இன்னவிதமானானென்றும் பிற்பாடு சொல்லுகின்றேன் தாங்கள் ஸ்நானம் செய்துவிட்டுவந்தபடியால் வீட்டிற்குப்போய் கொஞ்சம் சூப்பு சாப்பிடுங்களென்றான்.

பிறகு வீரகேசரி நடந்த சமாசாரமனைத்தும் அரசனுக்கு ஒன்றேனும் விடாமற்புகன்று. பையிலிருந்த திருடரனைவரையும் தகனஞ் செய்துவிட்டு அத்திருடர்களின் தலைவன் ஓடிப்போய்விட்ட சங்கதியை அரசனுக்கு தெரிவித்து அவனை யெவ்விதமேனும் கண்டுபிடித்து கொல்லவேண்டுமென யோசித்து தன்னுடன்கூட சில சேனைவீரர்களை யழைத்துக்கொண்டு அவர்கள் முன்னிருந்த குகையைநாடி வருகையில் திருடர்களின்தலைவனும் முன்பு குகைக்கு காவலாயிருந்த திருடனும் இவர்களைக்கண்டு மெய்நடுங்கி மிக்க திகிலுற்றவராய் இனி நாமிங்கிருந்தால் பிராணனுக் கபாயம் நேரிடுமாகையால் அவர்கள் வருவதற்குள் எங்கேயாகிலும் ஓடி ஒளிந்து பிராணனைக் காப்பாற்றிக்கொள்வேமென்று ஓடத்தலைப்பட்டார்கள் இவர்கள் ஓடுவதைக்கண்ட வீரகேசரி தன் சேனைவீரரோடு அதிவேகமாய் குதிரைகளைவிடுத்து திருடர்களருகிற்சென்று தங்களிடத்திலிருந்த ஆயுதங்களினால் இரண்டுபேரையும் கொன்றுவிட்டு குகையருகில்வந்து அவ்விடமிருந்த திரவியமனைத்தும் யெடுத்துக்கொண்டு தமது நகரம் வந்துசேர்ந்து தாங்கள் திருடரைக்கொன்றுவிட்டுவந்த சங்கதியை அரசனுக்குத் தெரிவித்தனர். அரசன் வீரகேசரியின் சமர்த்தினைப் புகழ்ந்து தான் முன்பு வாக்களித்திருந்ததுபோல் தனது மகளை வீரகேசரிக்கு விவாகம் செய்துக்கொடுத்து அனைவரும் சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கையில் வீரகேசரிக்கு தன் தாய்தந்தையருடைய ஞியாபகம் வந்து தனது சொந்த தேசத்திற்குச் செல்லவேண்டுமென்று தன்மாமனாரிடம் தெரிவிக்க அவர் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து தன் மகளுக்குவேண்டிய சீதனங்கள் யாவும் குறைவின்றி நடத்தி இவர்களோடு சில சேனைவீரர்களையும் கூட்டியனுப்பினர். பிறகு வீரகேசரி தன் மாமனாரால் கொடுக்கப்பட்ட சீதனங்கள் முதலிய யாவும் பெற்றுக்கொண்டு தனது சொந்த நகரம் வந்து தாய்தந்தையரைக்கண்டு தனக்கு நேர்ந்தவை யனைத்தும் புகன்று அனைவரும் சுகமாய் வாழ்ந்திருந்தனர்.

வீரகேசரியின் கதை முற்றிற்று.

நீதியில்லா அசாசூரனுக்கும்

மதியில்லா ஜோதிடனுக்கும் நேர்ந்த கதை.

அநியாய தேசத்தில் ஆச்சரியமாய் ஜீவித்திருந்த நீதியில்லா அசாசூரனானவன் தனது மனோகர்வத்தினால் யாதொருவரும் நிகரில்லாமற் சாமர்த்தியஞ் செய்துகொண்டிருக்கையில் அங்நகரத்தரசனுக்கும் அவன் விஷயத்திற் கொஞ்சம் பயங்கரமாகவேயிருந்தது. ஆனால் அவன் தன்னை வெல்லுவாரில்லாமல் தொல்லுலகனைத்தும் வல்லமையாய்ச் சுற்றி திரிந்துகொண்டிருக்கையில் நற்காலமிருக்கும்வரையிலும் எத்திசையிலும் சுத்தவீரனென பெயரெடுத்துக் கொண்டு ஜெயமிருக்கும்வரையில் பயமில்லாமல் யாதொருவரும் நிகரில்லாமல் சாமர்த்தியஞ் செய்துக்கொண்டிருந்தனன்.

இப்படியிருக்க படித்தும் மூடனென்றுரைக்கப்படும் ஓர் பிரசண்ட ஜோதிடக் களஞ்சியமென்னும் மதியில்லா ஜோதிடனொருவ னிருந்தனன். அவனுக்கு மரணகாலஞ்சமீபித்துவிட்டதினால் ஜனமேஜயன் சர்ப்பயாகத்தில் வீழ்ந்து மடிவதற்கு ஓடிவருகிற பாம்பைப்போல எல்லோருக்கும் சொல்லும் பல்லி கழுநீர்ப்பானையில் வீழ்ந்திறப்பதுபோல தனது மரணகாலத்தை நினையாமல் தனது சுயதேசத்தைவிடுத்து பரதேசஞ்சென்று பணஞ்சம்பாதித்துக் கொண்டு வருவோமெனும் பேராசையால் அநேக தேசங்களிருந்தும் அங்ஙனமெங்கும் போகாமல் அநியாயபட்டணத்திற்சென்று தனது வழக்கம்போல் சோதிடம் சொல்லிக்கொண்டிருக்கையில் அகஸ்மாத்தாய் நீதியில்லா அசாசூரன் சந்தித்து, ஏனையா! சோதிடரே எந்தவூரென்று விசாரிக்க, இவனும் மர்மமுணராதவனாகையால் இவன் யாவனோ எமாந்தவனென்று விசாரிப்பதாயினன்.

சோதிடன்:—ஐயா நீர் எந்த தேசத்தினரோ அறிகிலேனே ஐயோ! பாபம் ஆளைப்பார்த்தால் அழகாயிருக்கிறது, தலையெழுத்துமாத்திரம் வெகு துயரடையும்படியாயிருக்கிறதே.

அசாசூரன்:—நீர் யாரையா! சுவாமியா! என்னைப்போல மனிதனாயிருக்கின்றீரே. என் மண்டையிலெழுதி மயிரால் மறைத்திருப்பதை நீ எவ்விதமாய்க் கவனித்திருப்பாய் ஈதென்ன ஆச்சர்ய சாஸ்தியா யிருக்கின்றனவே.

சோதிடன்:—ஐயா யான்தான் சோதிடன் உலகத்திலிருக்கும் மனிதர்களின் ஜாதகமனைத்துங் கணித்து பலாபலன்களை விவரித்துரைத்து ஜாக்கிரதை யாய்ப் பிழைக்கும்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளவனுயிருக்கிறேன். இத்தனை நாளாய் எத்தனையோ மனிதர்கட்கெல்லாம் அவரவர் ஜனனராசி பலாபலன்களைக் கணித்துரைத்து கஷ்டப்படாமல் பிழைக்கும்படியாய்ச் செய்திருக்கிறேன்.

அசாசூரன்:—ஆ! அப்படியா ஐயா யான்மாத்திரம் உனக்குப் பகையா எனது ஜனனராசி லக்கின பொருத்தங்களைப் பார்த்து சொல்லக்கூடாதா.

சோதிடன்:—ஆ! அதற்கென்ன தக்ஷணை தாம்பூலம் சமர்ப்பித்துவிட்டால் எல்லா மனிதரிலும் உனக்குமாத்திரம் சரியாய்ச்சொல்வேன்.

அசாசூரன்:—ஐயா! யானென்செய்வேன் இங்கு என்கையில் காசில்லையே தருமத்திற்குச் சொல்லக்கூடாதா உங்களைப்போன்ற தருமவான்களெல் லாம் உலகிலிருந்தால் எங்களைப்போன்றவர்கட்கெல்லாம் குறையேது.

சோதிடன்:—ஈதென்ன ஞாயமின்றி பாஷிக்கின்றீரே தருமவான்களெனில் அன்னதானம், வஸ்திரதானம் செய்கிறது வழக்கம், சோதிடர் தருமத் திற்கு சாஸ்திரம் சொல்லுவார்களா? தக்ஷணையில்லா சோதிடம் பலிக் குமா? யான்தான் சொன்னுலும் எனது மனதிலிருந்து சாஸ்திரம் புறப் படுமா? நீர் நல்லமனிதனுயிருந்தும் இஞ்சிற்றும் ஆலோசியாமல் பேசுகி றீரே, ஏதாகிலுங்கொடுத்தால் இப்போதே இராசி பலாபலன்களனைத் தும் தெள்ளிதாய்ப்புகன்று உன்னைக் கஷ்டத்திற்சிக்காமல் தப்பித்துக் கொள்ளும்படி செய்து தொல்லுலகில் ஜீவிக்கும்படிசெய்வேன்.

அசாசூரன்:—ஐயா! அப்படியானு லென்னசெய்கிறதுகையிலொன்மில்லையே

சோதிடன்:—என்னு ஐயா பஞ்சைவேஷம்போட்டு பாசாங்குவார்த்தை பேசு கின்றீரே நீர் சிரசிலணிந்திருக்கும் தலைப்பாகையைக்கொடும் அப்போது தான் தலையிலெழுதியிருக்கும் ஜாதகபலனை நீதியாய் சொல்வதற்காகும்

என்று சொன்னவுடனே அசாசூரன் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, தனது சிரசிலணிந்திருந்த பாகையைக் கழட்டிக்கொடுத்தனன். சோதிடன்மிக வும் பேராசையுடன் வாங்கி சற்றுநேரத்தில் வெட்டுண்டுபோகும் தன் தலையில் முற்றிலுமிருக்குமென்று வீணெண்ணங்கொண்டு, கற்பலகையில் போட்டா ரையா இராசிலக்கின கணித ஆரூடசக்கரத்தை.

சோதிடன்:—ஐயா பார்த்தீரா இதுதான் இராசிசக்கரம் இனி உமதுபெயரைச்

சொன்னால் இராசியில் கிரகமிருக்கும் பலாபலனை விவரமாய்ச் சொல்லு கிறேன்.

அசாசூரன்:—ஐயா என்பெயர் அசாசூரன் யான் பிறந்தபோதே வெகு சத்த மாய்க் கூக்குரலிட்டுக் கூவியழுதேன். அதனால் எனது தாயாரெனக்கு அசாசூரனென்று பெயரிட்டனள். யானும் "தாய்சொற்றுறந்தால் வாசக மில்லை" யென்பதுபோல் யாதொருவருக்கும் அஞ்சுதலின்றி வெகு கீர்த் திப்ரகாசமாய் எங்கும் பேரெடுத்து உலாவித் திரிந்துகொண்டிருக்கிறேன் ஆனால் நீர் சோதிட கணிதவல்லோனாகையால் உம்மால் எனது ஜாதக பலாபலன்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேணுமென்று ஓடிவந்தேன்.

சோதிடன்:—சரி! சரி! நீர் பிறந்த ராசிலக்கினம் வேறு, உமக்கு வைத்த பெய ரோ நூதனம் ஆனாலும் கோட்சாரபலனைப்போற் கணித்திடினும்கணிக் கலாம், அதைக்குறித்து யாமென்ன யோசித்திடினும் அதைப்போலவே நிறைவேறும்.

சோதிடன்:—நல்லது உமது இஷ்டம்போற் சொல்லுகிறேன் கவனிப்பீர். அசாசூரனென்பதற்கு முதலெழுத்து. அ. அக்ஷரமாகையால் மேஷராசி யாயிற்று. அதற்கு காலசக்கரம் கணிக்கின்றேன் கவனிப்பீர்.

இதோ பார்த்தீரா இதில் நாலாவது வீட்டில் . குரு இருக்கின்றபடியால் உமக்கு வெகு கஷ்டமாயிருக்கும். அடுத்த வருஷத்தில் ஐந்தாவது வீட்டில் குருவருகிறார். அப்போதுதான் நீர் வெகு சாமர்த்தியமாகவும்வீரபராக்கிரமமு மாகவுமிருப்பீர். ஆனால் தற்சமயம் வெகு கஷ்டநிஷ்டூரமடைந்திருந்திருப்பீர் இதற்குமுன் வெகுவீடத்தில் அடி உதை அபிஷேகாதி வெகு விமரிசையாய்ப் பெற்றிருப்பீர். அன்றியும் இப்போது உனது ஜாதகப்படியே மேஷராசிக்கு நாலில் குருவிருக்கிறபடியால் கொஞ்சம் கஷ்டப்படுவீரென்று சொன்னவுட னே அசாசூரனுக்குக் கோபம்பிறந்து சொல்லுகிறான்.

அசாசூரன்:—வீணையா சோதிடரே குருவென்றால் யார்? அவர் எங்கிருந்தா லென்ன ஆண்டவனால் உற்பத்தியான ஜீவர்களை அவர் தொந்தரை செய் வதேன்? அன்றி யான் அவருக்கு யாதேனும் கொடுமை செய்ததுண்டோ

சோதிடன்:—(சிரித்துக்கொண்டு) ஐயா! அசாசூர ஆசாமியே உனக்குவைத்த பேருக்குச்சரியாய்ப் பாஷிக்கின்றீரே. ஜீவர்கள் முன் ஜனனத்திற்புரிந்த பாப கிர்த்தியத்தினால் இந்த ஜனனத்திற் சரீரமெடுத்து கஷ்டசிஷ்டூர மனுபவிப்பதற்குத் தகுந்தவிதமாய் நவக்கிரகங்கள் அந்த ஜாதகனுக்குத்

தகுந்த தண்டனைவிதித்துக் கஷ்டப்படச்செய்கின்றனர். அஃதெப்படி யென்றால்:—

ஜோதிட விருத்தம்.

ஜன்மராமர்வனத்திலே சீதையைச் சிறைவைத்ததும்
நீதிலாதொரு மூன்றிலே துரியோதனன்படை மாண்டதும்
தன்மபுத்திரர்நாலிலே வனவாசமப்படி போனதும்
சத்யமாபெலி ஆறிலே யிருகாலிலேதளை பூண்டதும்
இன்மையெட்டினில் வாலிபட்ட மிழந்துபோம்படி யானதும்
ஈசனொரு பத்திலே தலையோட்டிலே இறந்துண்டதும்
வன்மையற்றிட ராவணன்முடி பன்னிரண்டினில் வீழ்ந்ததும்
மன்னுமாகுரு சாரிமாமனை வாழ்விலாதுரு வென்பவே.

என்பதைக் கிஞ்சிற்றும் யோசியாமல் பாஷிக்கின்றீரே ஈதென்ன நூதனகாக்ஷி நீரென்னை சாஸ்திரபுராண இதிகாசங்களை வாசித்துணராதவர்போலிருக்கின்றனவே.

அசாசூரன்:—ஐயா சோதிடரே அவ்வளவு தூரம் வாசித்தால் இவ்வளவு தூரம் வந்து உன்னை சாஸ்திரங் கேட்பேனோ? அன்றியும் நீர் சொன்ன பாட்டில் கிரேதாயுகம், திரேதாயுகம், துவரபரயுகத்தி லிருந்தவரையெல்லாம் இழுத்துவிட்டீரே அவர்களென்ன காரணத்தில் அவ்வளவு கஷ்டநிஷ்டூரமடைந்தனர்.

சோதிடன்:—ஐயா நவக்கிரகங்களிலொருவராகிய குருபகவான் ஸ்ரீராமச்சந்திரருக்கு ஜன்மத்திலிருந்தபோது தனது சிற்றன்னையாகிய கைகேசியின் கலகத்தினால் நாட்டைவிடுத்து மனைவியுடன் வனவாசியாய் வருகையில் தனது தேவியாகிய சீதையைப் பிரிந்திருந்தனர். தருமராஜனுக்கு நாலாமிடத்தில் குருவிருந்தபடியால் தனது இராஜியத்தைத்தோற்று வனவாசியாயலைந்திருந்தார். துரியோதனனுக்கு மூன்றாமிடத்தில் குருவிருந்தபடியினால் தனது சேனாசைன்னியத்துடன் தானும் போர்ககளத்தில் உயிரிழந்தனன். மஹாபெலிச் சக்கிரவர்த்திக்கு ஆறாமிடத்தில் குருவிருந்தபடியினால் வாமனமூர்த்திக்கு மூன்றடி மணதானஞ் செய்துவிட்டு தான் உலகில் வசிப்பதற்கு இடமில்லாமற் பாதாளத்திற் போயழுந்தினர். வானராதிபனாகிய வாலிக்கு எட்டாமிடத்தில் குருவிருந்தபடியினால் அழியாத சரீரமாகிய அவனுடைய ஆவிக்கபாயமாகி சகோதரனாகிய சுக்ரீபன்

வேண்டுகோட்படியே ஸ்ரீராமச்சந்திரரின் அஸ்தத்தினால் "மாணமடைந்தனன் உலகமெங்கும் படியளக்கும் ஜெகாக்ஷகனுகிய பரமசிவனுக்கு பந்தாமிடத்தில் குருவிருந்தபடியினுல் பிரம்மகபாலத்தைக் கையிலேந்தி யாசகம்புரிந்து வயற்றை வளர்த்தனர். தசக்ரீவனுகிய இராவணேஸ்வரனுக்கு பணிரெண்டாமிடத்தில் குருவிருந்தபடியினுல் தனதுசேனுசைன்னியமாகிய இராக்ஷத சேனையுடன் தானும் தலையறிந்து பூமியில் வீழ்ந்தனன். இப்படியெல்லாம் குருபகவான் அவர்களை ஆடச்செய்துவிட்டனரே நீர் எம்மாத்திரம் மனிதனுகிய உன்னை நீயே மெய்ச்சிக்கொண்டு மிகவும் மனோகர்விபாயிருக்கின்றனையே. இப்போதுதானென்ன யாகனுகிலும் ஓர் வீராதிவீரன் வந்து உன்னை ஓரறை கொடுத்தால் அழுதுக்கொண்டு போவாயல்லவோ.

என தனக்கு வருவதையுணராமல் தமாஷாய்ச் சொன்னுன். அசாசூரனுக்குக் கோபம்பிறந்து இடையிற் சொருகியிருந்த கத்தியை திடீரென்றெடுத்து ஜோசியனை துண்டுதுண்டாய் வெட்டினுன். அச்சமயம் அருகிலிருந்தவர் குய்யோமுறையோவென கூச்சலிட்டதைக் கேள்வியுற்ற தலையாரிகள் முப்பத்திரெண்டாயுதத்துடன் ஓடிவந்து இவனைக் கைப்பிடியாய்ப் பிடித்தால் தம்மையும் வெட்டிவிடுவானென்று பயந்து தனுசிற் கணைதொடுத்துஅசாசூரன்காலிற் காயப்படும்படியாய் செய்துவிடவே அவன் பூமியில் வீழ்ந்தனன், அப்போது தலையாரிகள் அவனைக் கொண்டுபோய் இராஜசமுகத்தில் விட்டனர்.

சோதிடனைக்கொன்ற அசாசூரன்கேஸ் விசாரணை செய்வது

அசாசூரன்:—ஐயா இராஜனே என்னை இவர்கள் அநியாயமாய்க் காயப்படுத்தினர்களே நீர் உலகத்தை ஆளுகிற அரசனு? ஆடுமாடு மேய்க்கும்ஆளா?

அரசன்:—என்னடா தடியா உன்னைப் பார்த்தால் வழிபறித்திருடனைப்போலிருக்கின்றதே நீயா யென்னை அவமரியாதையாய்ப் பரிகாசிப்பவன்.

அசாசூரன்:—என்னு ராஜனே சங்கதி விசாரியாமல் கோபித்துக்கொள்ளுகின்றீரே. என் காலைப்பார்த்துப் பேசுவீர்.

மந்திரி:—என்னடா துஷ்டா! உலகின் மாந்தரனைவரும் மஹாராஜாவின் பாதத்தில் வீழ்ந்து பணிந்து தமது மனக்குறையனைத்தும் புகன்று தாம் புரிந்த குற்றத்தை மன்னித்தருளும்படி வேண்டிக்கொள்ளவேண்டும். அஃதன்றி உன் காலையா அரசன் பார்த்துப்பேசுவது, நல்லதிருக்கட்டும், தலையாரிகாள் இவனையேன் பிடித்துக்கொண்டு வந்தீர்கள்.

...ரிகள்:—ஐயா இவன் குற்றவாளியாகையினால் இழுத்துக்கொண்டு வந்தோம்.

அசாசூரன்:—ஐயா! இவர்கள்தான் காலையொடித்த குற்றவாளிகள். காயத்தைப் பார்த்து நீதியாய்ப் பேசுவீர்

அரசன்:—மந்திரி! ஈதென்ன விந்தையான வியாஜ்ஜியமாயிருக்கின்றன. இதனைச் சற்று விவரமாய்த் தெரிந்து விசாரிப்பாய்.

மந்திரி:—மஹாபாக்கியம் வேந்தே தமது உத்திரவின்படியே விசாரிக்கின்றேன்.

அசாசூரன்:—சரி! சரி! இதுதான் வேடிக்கையான சமயம். இனி தலையாரிகள் கதி ஆவிக்கபாயமான ஆபத்துதான்.

என பகர்ந்ததை வினவிய அரசனும் மந்திரி பிரதானியரும் இராஜ சமஸ்தானத்திலிருக்கும் பெரிய உத்தியோகஸ்தரும் ஆச்சர்யமடைந்து இந்தத்தலையாரிகள் என்னமோ சூதுமார்க்கஞ்செய்து இவனை இழுத்துக்கொண்டுவந்தனர்போற் காண்கிறதென மதித்து மர்மமுணராமல்வெவ்வேறுவிதமாய் ஆலோசித்துக்கொண்டிருந்தனர். அத்தருணம் மந்திரியானவன் சற்று யோசித்து தலையாரிகள்தான் குற்றவாளிகளென மதித்து அரண்மனை காவலாளிகளால் சுற்றிலுங் காவலேற்படுத்திவிட்டனர். இவ்விபரீத அநியாய தொடுவழக்கைக் கவனித்த காவலாளிகளின் நிலை கலவரமமைந்த பயங்கரத்தினால் கால்கை நடுக்கமெடுத்துக்கொண்டன. இந்த வியாஜ்ஜியத்தை விபரீதப்படுத்தி வெகு விநோதமாய் விசாரிக்கலாயினர்.

மந்திரி:—ஐயா! நீர் எத்தேசத்தினர். உம்மை யாது காரணமாய் இவர்கள்காயப்படுத்தினர்

அசாசூரன்:—மஹாப்ரபு! யான் ஓர் சோதிடனுக்கு சிரசிலணிந்திருந்த தலைப்பாகையைக்கொடுத்து ஜோசியங்கேட்டேன் அதற்கு அவன் எனக்கு நன்மையாய்ச் சொல்லாமல் நான்காமிடத்தில் குருவிருப்பதனால் பலவித துன்பமனுபவிப்பாயென்று சொன்னதனால் யான் கோபாவேசத்துடன் அடடா நாம் தலைப்பாகை கொடுத்தும் சஞ்சலமடைவாயென்று சாஸ்திரஞ்சொன்ன சோதிடனை சும்மா விடலாமாவென்று துண்டாக வெட்டினேன். வெட்டுண்டவனென்னமோ துண்டாக விழுந்து தான்செய்தகுற்றத்திற்காக நாணமுற்றவனாய்ப் இறந்துபோயினன். இவர்கள் ஏன் என்னை அஸ்திரத்தினாற் காயப்படுத்தினர்கள், இவர்களை யான் யாதொரு தீங்கும் புரியவில்லையே. அகஸ்மாத்தாய் திரேதாயுகத்தில் ஸ்ரீராமச்சந்திரன் விருக்ஷத்தின் இலைமறைவில் மறைந்துகொண்டிருந்து சுக்ரீவனுடன் மல்யுத்தஞ்செய்யும் வாலியின்மீது இராமபாணம் விடுத்துக் கொன்றதுபோல

இந்த தலையாரிகள் சோற்றைப்புசித்துத் தமாஷாய் திரிந்துகொ… மல் சோதிடனை வெட்டிவிட்டு நம்மைப்போன்ற சமர்த்தர் யாவரேனு முண்டோவென்று சந்தோஷமாய்ப் புலியைப்போற் கர்ஜித்துக் கொண்டு வீரப்ரதாப விஜயகேசரியைப்போல் நின்றிருக்கையில் இந்த தலையாரிகள் தூரத்திலிருந்துகொண்டே தனுசிற் கணை தொடுத்து காலிற் படும்படியாய் விடுத்தனர். ஆனாலும் பெரிதல்ல அரசன் இவர்களை தண்டித்தாலாச்சுது. இல்லாவிட்டால் ஜோசியனை வெட்டிய கத்தி கூர்மையாசவேயிருக்கிறது பாரும்,

என, தன் இடையிற் சொருகியிருந்த கத்தியைக் காட்டினான். அரசனும் மந்திரியும் ஆற்றொணா ஆச்சரியமடைந்து அசாசூரன் வாக்குமூலத்தினாலேயே அவன் குற்றவாளியெனத் தெரிந்து அப்போதே கொலைஞர்களால் அசாசூரனை வெட்டிப்போடும்படி செய்துவிட்டு தலையாரிகள் துஷ்டனைப் பிடிப்பதற்குத்தகுந்த ஆலோசனையுடன அஸ்திரப் பிரயோகஞ்செய்து காயப் படுத்திவிட்டு ஆசாமியை அரண்மனையி லழைத்துக்கொண்டு வந்ததினால் தகுந்த தண்டனை விதிக்கலாயிற்று. அவன்மாத்திரம் ஊரிலிருந்தால் வெகு பேரைக் கொன்று எமபுரிக் கனுப்புவானென்பதற்குச் சந்தேகமுளதோ இவர்களால் அந்த துஷ்டனைக் கொன்றுவிட்டு உலகைப் பயமிலாதிருக்கும்படி செய்தோமென்று சந்தோஷித்து தலையாரிகட்கு சம்பளமும் அதிகப்படுத்திவிட்டனர் ஆகையால் யாதாமொருவரும் மனோகர்வம் கொள்ளலாகாது அநீதியாயிருந்தால் அப்போதே அழிவார். நீதியாயிருந்தால் செங்கோன் வாழ்வார்.

ஆருக்கும் அஞ்சாத அசாசூரன் கதை.

சம்பூர்ணம்.